# முன்னாள் யாழ்ப்பாண எம். பி. யோகேஸ்வரனின் ஜீப் கடத்தப்பட்டது!

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

முரசு 2 28-7-1985 ஞாயிற்றுக்கிழமை (ஆடி 13 ஜுலைகஸ்தா 9) முழக்கம் 172

யாழ்ப்பாணம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் ஜீப் வண்டி, நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. ராசாவின் தோட்டம் வீதியிலுள்ள திரு யோகேஸ்வரனின் தந்தையாரான டாக்டர் வெற்றிவேலுவின் இல்லத்தில் வைத்தே ஜீப்வண்டி கடத்தப்பட்டதாம். முதலில் இங்கு சென்ற இனம் தெரியாதவர்கள் ஜீப்பின் நான்கு சக்கரங்களும் இல்லாதிருப்பதைக் கண்டு, அங்கிருந்த யோகேஸ்வரனின் மைத்துனரை நல்லூரிலுள்ள வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கு கழற்றி வைக்கப்பட்டிருந்த நான்கு சக்கரங்களையும் எடுத்து வந்தனராம். அதன் பின்னர் சக்கரங்களைப் பூட்டிய பின்னரும் ஜீப் "ஸ்ராட்" செய்ய முடியாதிருந்ததால், அதனை மற்றொரு வாகனத்தில் கட்டி இழுத்துச் சென்றதாகத் தெரியவந்துள்ளது. 1981ம் ஆண்டு யோகேஸ்வரனின் —8ம் பக்கம் பார்க்க

★ தமிழக அமைச்சர்களைச் சந்திக்க வைக்க தூதுவர் டிக்ஸிற் ஏற்பாடு

# பதியுதீன் தலைமை முஸ்லிம் குழு 3-ம் திகதி தமிழ்நாடு செல்கிறது!

## தீவிரவாத தலைவர், கூட்டணியினருடன் பேசுவர்

## இரு மாகாண சபைகளையே வலியுறுத்தப் போவதாக பதியுதீன் 'ஈழமுரசு'க்கு தகவல்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தமிழக அரசியல் தலைவர்களுடனும், தமிழ்நாட்டில் தங்கியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினதும், தமிழ்த் தீவிரவாத இயக்கங்களினதும் தலைவர்கள், மற்றும் பிரமுகர்களுடனும் மனம் திறந்து பேசுவதற்காக தமது தலைமையிலான அறுவர் கொண்ட முஸ்லிம் குழுவொன்று எதிர்வரும் மூன்றாம் திகதி அங்கு செல்லவிருப்பதாக முஸ்லிம் கவுன்ஸில் தலைவரும், முன்னாள் கல்வி அமைச்சருமான கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் நேற்றிரவு ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் போதனா மொழியும், தாய்மொழியும் தமிழ் தான். எனவே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் முஸ்லிம்களின் கருத்தை அறிய வேண்டியது அவசியமானதென்று தெரிவித்த அவர், இவ்விடயத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பும் அத்தியாவசியமானதென்று சொன்னார்.

தமிழ் நாட்டிலுள்ள ஐந்து பிரதான தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களையுமே தாம் சந்தித்துப் பேசவிருப்பதாக பதியுதீன் மஹ்மூத் சொன்னார்.

தமது தலைமையிலான இலங் —8 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியை நேற்றுக்காலை பதியுதீன சந்தித்து பேசினார்

(கொழும்பு)

தமிழகத்துக்குச் செல்லும் இலங்கை முஸ்லிம் குழுவின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் நேற்றுக் காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனவை தனிமையில் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பு வார்ட் பிளேஸிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் நடைபெற்றது.

இனப்பிரச்சினை சம்பந்தமான பூட்டான் மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் பற்றியும், அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் —8 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வீரரை விடுமாறு அரச அதிபர் வேண்டுகோள்

வவுனியாவில் கடத்திச் செல்லப்பட்ட இராணுவ வீரர் நிமால் ஜெயவர்த்தனவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. வி லோகேஸ்வரன் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்டவரின் தந்தையான பொடிமாத்தயா பல வருடங்களாக வவுனியாவில் குடியிருப்பவரென்றும், இவரது குடும்பம் தமிழ் மக்களுடன் நெருக்கமாக வாழ்ந்து வருவதுடன், காலஞ்சென்ற முன்னாள் எம். பி. வி சுந்தரலிங்கத்துடன் பொடிமாத்தயா ...8-ஆம் பக்கம் பார்க்க

## முல்கிரிகல இடைத்தேர்தல்

(கொழும்பு)

முல்கிரிகல தேர்தல் தொகுதிக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி திகதி ஆகஸ்ட் பதினைந்தெனத் தேர் ...8 ஆம் பக்கம் பார்க்க

## ஜூலை கொலைகளை கண்டித்து நேற்று மாபெரும் ஊர்வலம்!

(இ. பாரதி)

1983 ஜூலை படுகொலைகளைக் கண்டிக்கும் முகமாக மருதனார்மடத்திலிருந்து நேற்றுப் பகல் இரண்டு மணியளவில் ஆரம்பமான பிரமாண்டமான ஊர்வலம், திருநெல்வேலியிலுள்ள பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அஞ்சலி வைபவத்துடன் முடிவடைந்தது.

...8 ஆம் பக்கம் பார்க்க

## இன்ரசிற்றி ரயில் இன்று யாழ்ப்பாணம் வரை மட்டும்

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு செல்லும் இன்ரசிற்றி கடுகதி புகையிரதம் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்தே புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் காங்கேசன்துறையில் இதற்கான ஆசனங்களைப் பதிவு செய்தவர்கள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து தமது பயணத்தைத் தொட 8 ஆம் பக்கம் பார்க்க

காக்கைதீவு சேமக்காலையில் மீட்கப்பட்ட

## மூன்று இளைஞரின் சடலங்களும் ஊர் மக்களால் எரிக்கப்பட்டன!

(வண்ணார்பண்ணை நிருபர் எட்வர்ட் லியோன்)

காக்கைதீவு கரையாம்பிட்டி சேமக்காலையில் புதைக்கப்பட்டபின் நேற்று முன்தினம் வெளியே எடுக்கப்பட்ட மூன்று இளைஞரின் சடலங்களும் நேற்றுப் பிற்பகல் ஐந்து மணியளவில் ஊர் மக்களால் தீமூட்டி எரிக்கப்பட்டன.

இச்சடலங்கள் கடைசிவரை அடையாளம் காணப்படவில்லையென்றும், நேற்று முழுவதும் மழையிலும், வெய்யிலிலும் கிடந்து இவை உருக்குலைந்ததுடன், நாய்களாலும் கடித்து துண்டாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

...8 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மத்திய வீதி முன்னைநாள் நகரசபை உறுப்பினரான சேமபால நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் —8 ஆம் பக்கம் பார்க்க

## எச். டபிள்யூ. கலாநிதியானார்

ஜனாதிபதியின் இளைய சகோதரரும், இராணி அட்வகேட்டும், பூட்டான் மாநாட்டுக்குத் தலைமைதாங்குபவருமான எச். டபிள்யூ. ஜெயவர்த்தனவுக்கு கொழும்புப் பல்கலைக்கழகம் நேற்று கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

ஆலயத் திருவிழாவின்போது

## தவில் கலைஞர்களின் போட்டி நேரடி மோதலில் முடிந்தது

(சா. வகச்சேரி)

ஆலயத் திருவிழா தவில் சமாவில் தவிலில் விளையாடிய தவில் வித்துவான்களின் கைகள், சிறிது நேரத்தில் கன்னங்களிலேயே விளையாடத் தொடங்கியதாம். இறுதியில் அடியார்கள் தலையீட்டினால் தவில் கலைஞர்களின் மோதல் விலக்கப்பட்டு, ஒரு கோஷ்டியை வீட்டிற்கு அனுப்பிவிட்டு மறு கோஷ்டியுடன் திருவிழாவைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை இங்கு ஏற்பட்டது.

... 8 ஆம் பக்கம் பார்க்க

national weekly வாரமலர் விலை: ரூபா இரண்டு

## யாழ்ப்பாண செயலக நிர்வாக உத்தியோகத்தர்

(நவாலி)

யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தராகவும், காரியாலய உதவியாளராகவும் திரு ஜா இ. இரத்தினவேல் இம்மாதம் 8ந் திகதியிலிருந்து நியமனம் பெற்றுள்ளார்.

இவர்முன்பு குருநாகலை, அநுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள சுகாதார அத்தியட்சகர் பணிமனைகளில் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றியுள்ளார். 1983ம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் பெற்ற இவர் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ACKNOWLEDGEMENT

**ANANDARAJAN**

Mrs. Padma Aanandarajan and Children wish to thank the staff, students, prefects, alumni, parents of St. John's and Chundikuli Girls' Colleges, the principals, teachers and students of the several Jaffna Schools, the clergy, friends and relations for all the spontaneous and sincere acts of kindness, consoling presence, floral and other tributes and messages of sympathy at their time of deep distress and grief.

## விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், இவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்
(ரெலிகோணர் கிளை)
159, மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை
யாழ்ப்பாணம்

## பகலிலும் திருட்டு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் சந்தியில் சன நடமாட்டமுள்ள வீட்டுப் பக்கம் சிலரின் கெடுபிடிகளால் கடந்த பல மாதங்களாக சில கடைகள் நிரந்தரமாகவே பூட்டப்பட்டுள்ளன.

பூட்டப்பட்ட இக்கடைகளின் பிற்புறமாக கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் இனந்தெரியாதவர்களால் பகல் வேளையிலேயே களவாடப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகிறது.

நாளை

## நூல் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை திங்கள் மாலை மூன்று மணிக்கு 'உறவுகளின் ராகங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ்-ஆயர் மேதகு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, அ. ம. தி சபை முதல்வர் அதி வண ஜூயி பொன்னையா, யாழ்-பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி உரையாற்றுவார்கள்.

இந்நூலின் ஆய்வுரையை விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசாவும், விமர்சக உரையை விரிவுரையாளர் கலாநிதி மௌனகுருவும் நிகழ்த்துவார்கள்.

யாழ்-ஆயர் நூலின் முதற் பிரதியை வழங்க, வைத்திய கலாநிதி எமில் இன்ஞசித் தம்பி பெற்றுக் கொள்வார்.

நூல் ஆசிரியர் வண. பிதா வின்சன்ற் பற்றிக் பதிலுரையாற்றுவார்.



✱ ஏழாலை தெற்கு பாலசுப்பிரமணியம் தங்கரத்தினம் தம்பதிகளின்மகள் பாலகௌரி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ மீசாலை வடக்கு அருணாசலம் அற்புதமலர் தம்பதிகளின் மகள் வனிதா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ பிரான்ஸ் வரதராஜன் செல்வராணி தம்பதிகளின் மகன் பரிஸ்சுதன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ புன்னாலைக்கட்டுவன் தெற்கு குணரத்தினம் செல்வராணி தம்பதிகளின் மகள் தர்சினி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ வேலணை மேற்கு சண்முகலிங்கம் தம்பதிகளின் மகன் பாலகுமார் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி இராசதுரை சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வி ஜெயகௌரி இன்று தனது பதினுன்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ அரியாலை சந்தனமாதா லேனைச் சேர்ந்த சுந்தரலிங்கம் பத்மாவதி தம்பதிகளின் மகள் சுதர்சினி இன்று தனது பத்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.

✱ கொக்குவில் மேற்கு சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதிகளின் மகன் சிவப்பிரியன் இன்று தனது பத்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

## வரி வசூலிப்பு

(சாவகச்சேரி)

நெற்காணி ஏக்கர் வரிவசூல் செய்வதில் இப்பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளனர் கமநலச் சேவை உதவி ஆணையாளரின் பணிப்புரையைத் தொடர்ந்தே இந்த நெற்காணி ஏக்கர் வரி வசூலிப்பு நடைபெறுகிறதாம்.

## சோதிடம்

வெளிநாட்டு ஜனாதிபதிகளால், பிரதமர்களால், சோதிட சஞ்சிகை, வசனொலி நிதாயனம், பத்திரிகைகளால் பாராட்டப்பட்டுள்ள சர்வதேசப் புகழ்பெற்ற சோதிடரிடம் உங்கள் விடயங்களுக்கு ஆலோசிக்க நேரிலோ அல்லது தபால் மூலமோ விபரமறிய விரும்புவோர் (ரூபா இரண்டுக்கு முத்திரை அனுப்புக)

— அ. வி கணேசநாதன்
''இரத்தின பவனம்'', பாதிரியடைப்பு,
மயிலிட்டி, காங்கேசன்துறை.

உங்கள் முதலீட்டு வளர்ச்சியில்
அக்கறை கொண்டு
அபிமானம் பெற்ற

தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினர் வழங்கும்

# மேலும் ஒரு சலுகை!


இதுவரை மாதாந்த வட்டி பெறுவோருக்கு வழங்கி வந்த 25% வீதவட்டி

30% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினரின்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437




# இலங்கையின் உயர் கல்விப் பாரம்பரியமும் யாழ். பல்கலைக் கழகமும்

கலாநிதி சபா. ஜெயராசா
யாழ். பல்கலைக்கழகம்

நீண்ட நெடிய உயர் கல்விப் பாரம்பரியத்தின் பின்னணியிலே மீண்டெழுந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இந் நாட்டுத் தேசியக் கல்வி மறுமலர்ச்சியின்படி மலர்ச்சியாக முகிழ்த்தெழுந்தது. ஆங்கிலக் கல்வி மரபு தோற்றுவித்த ஆய்வறிவாளரின் தேசிய நோக்கு, உயர் கல்வி நோக்கு, என்பவற்றின் இயக்க வடிவமாக — சேர். பொன். அருணாசலம் அவர்களின் முயற்சியாக - 1906ஆம் ஆண்டிலே பல்கலைக்கழக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் வளர்ச்சிப் பெறுபேறாக 1921 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகக் கல்லூரி நிறுவப் பெற்றமையும், இந் நிறுவனம் 1942 ஆம் ஆண்டுப் பல்கலைக்கழகச் சட்டப்படி இலங்கைப் பல்கலைக்கழகமாக நிறைவு பெற்றமையும் இந் நூற்றாண்டின் அரைப் பகுதியில் இலங்கையில் நிகழ்ந்தன.

கல்வியியல் உலகளாவிய நிகழ்ந்த பல சம்பவங்களின் சமாந்தரங்களை இலங்கையிலும் காணமுடியும். எழுத்தறிவின் விசை கொண்ட பரவல், கிராமங்களை நோக்கிய கல்வி விரிவு, தாய் மொழிக் கல்வியின் முன்னேற்றம், தொழில்களின் விசேடத்திறன் கல்வியால் விசையூட்டப்பட்டமை, தொழிலாளர், விவசாயிகளின் வாரிசுகள் கல்விப் பரிமாணம் பெறத் தொடங்கியமை, வாழ்க்கைத் தர அபிவிருத்தி, மக்களாட்சிக் அரசியல் கல்வியுடன் சங்கமித்தமை, சோவியத் நாட்டிலே மலர்ந்த சமதர்மப் புரட்சி, அகிலத்தில் அனைவர்க்கும் கல்வி என்பதை எதிரொலிக்கச் செய்தமை, நவ குடியேற்றவாத எதிர்ப்பு உணர்வு ஒன்றுடன் ஒன்று இசைந்த பல்வேறு நிகழ்ச்சிகளை இலங்கை அனுபவித்தது.

தேசிய எழுச்சியின் பெறுபேறுகள் கல்வியின் நிபந்தனைகளைத் தனியார் நிறுவனங்களுக்குட் கட்டுப்படுத்தி வைக்காத அரச தலையீடுகளைத் தூண்டவே உதவி நன்கொடை பெற்ற பாடசாலைகளையும் ஆசிரியர் கலாசாலைகளையும் அரசு பொறுப்பேற்றது. அவற்றின் வளர்ச்சி உயர்கல்வி ஒழுக்கங்களிலும் உட்புகுந்தது. 1966 ஆம் ஆண்டுப் பல்கலைக் கழகச் சட்டம் பல்கலைக் கழகத்தின் தொழிற்பாடுகளை அரசின் நேரடித் தலையீட்டுக்குள் வருவித்தது.

பல்கலைக்கழகங்களிலே தாய்மொழிக் கல்வி இயக்கங் கொள்ளத் தொடங்கிய செயல் முறைகள் பன்முகப்பட்ட இயக்க விளைவுகளுடன் இடையுறவு கொண்டிருந்தன. சாமானியர்களின் பல்கலைக் கழகப் பிரவேசம் என்பதுடன் இணைந்த சிந்தனைச் சரங்கள் வளர்ந்தன. தேசிய செல்வங்களின் சமனற்ற பரம்பலின் எதிர் விளைவுகள் விரிந்து நோக்கப் பெற்றன. தேசிய கலை இலக்கியங்களைத் தூண்டும் நடவடிக்கைகள் விசை கொண்டன. நவ குடியேற்றவாத முறைமைகள் விமர்சிக்கப் பெற்றன. சமூக அடுக்கின் அடிமட்டங்களிலிருந்து உதயமாகிய புதிய பட்டதாரிகளின் புரட்சிகர உணர்வுகள் ஒருபுறம் வளர்ச்சி கொண்டதாயினும், மறுபுறம் அவர்களின் சூழ்நிலையில் ஏற்பட்ட நிலைகுத்து முன்னேற்றம் மத்திய தர வர்க்க மனோபாவமாக்கலுக்கும் இடமளித்தது.

இவற்றின் பின்னணியிலே தேசிய அரசியல் இயக்கங்கள் பல்கலைக் கழகங்கள் பற்றிய முன்மொழிவுகளைக் காலத்துக்குக் காலம் முன்வைத்துச் செயற்படுத்தியும் வந்தன. ஆரம்பத்தில் பௌத்த மத பிக்குகளுக்கு மட்டுமென ஆரம்பிக்கப் பெற்ற வித்தியோதய வித்தியாலங்காரப் பிரிவேனாக்கள் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்று அனைத்து மாணவர்க்கும் உரியதாகத் திறக்கப் பெற்றமை சிங்கள மொழிவாயிலான உயர் கல்வியை விரிவாக்கும் நடவடிக்கையாயிற்று. மொழி உணர்வு எழுந்த இந்த வேகத்தின் பின்னணியிலே பொருளாதார அறைகூவல்கள் மூலாதாரமாக நின்றன. குடியேற்ற நாட்டு ஆட்சிக்காலத்தின் இழப்புக்களைத் தாய்மொழி வாயிலாக மீட்டெடுத்து விடலாம் என்ற கற்பனை நயப்பு மேலோங்கியிருந்தது.

1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச்சட்டம் தமிழ்மொழிக் கல்வி தொடர்பான நேரானதும், எதிரானதுமான செயற்பாடுகளைத் தூண்டியது. அதே யாண்டு தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டமை இவற்றுடன் இணைந்த நிகழ்ச்சியாயிற்று. "தமிழ் மாணவர்கள் தமக்குப் புறம்பான பண்பாட்டுச் சூழ்நிலையில் ஏதோ வெறுக்கப்பட்டவர்கள் போல் அவர்களது நிலை அமைந்துள்ளது. பேராதனையிலுள்ள தமிழர் நிலை வருடாவருடம் சீரழிந்து வருகின்றதென்பது கண்கூடு" என்று பேராசிரியர் டயில்வாகனம் அவர்கள் 1957 ஆம் ஆண்டில் வெளியிட்ட ஒரு பிரசுரத்திற் குறிப்பிட்டார்.

1958 ஆம் ஆண்டில் வித்தியோதய வித்தியாலங்கார பிரிவேனாக்களைப் பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்திய வேளை திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தனித் தனிப் பண்பாட்டுப் பல்கலைக் கழகங்கள் வழங்கப் பெறும் எனக் கூறியது.

காலஞ்சென்ற சு. நடேசபிள்ளையவர்கள் தமிழ்ப்பண்பாட்டுப் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதற்குப் பரமேஸ்வரக் கல்லூரியையும் அதன் சொத்துக்களையும் கொடுக்க முன் வந்தார். ஆனால், தமிழ் அரசியலாளரிடத்து எழுந்த "இந்துப் பல்கலைக்கழகம்" தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற சுலோகங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்திற் பல்கலைக்கழகம்

—6-ஆம் பக்கம் பார்க்க

## வண்ணம்

'கலைமகள்' பத்திரிகைக்கு 1981ல் 50 ஆண்டுகள் நிறைந்தன. அவ்வளவு காலமும் பிரசுரமானவற்றில் தேர்ந்து தொகுத்த 'பொன் விழாக்கதம்பம்' என்றொரு நூலை 82ல் வெளியிட்டார்கள் 'கதம்பம்,' 'திரட்டுப்பால்' – என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிற அதன் முன்னுரையில் இப்படி இருக்கிறது.!... சிறுகதை மன்னர்களாக விளங்கிய கு. ப. ரா புதுமைப்பித்தன், ஜெயசிற்பியன் ஆகியோரின் சிறுகதைகளை இதில் படித்து ரசிக்கலாம்.

நூலின் உள்ளேயோ அல்லது பொருளடக்கப் பட்டியலிலோ எங்கே தேடினாலும் புதுமைப் பித்தன் கதையைக் காணவேயில்லை!

இவ்வளவு கவனயீனமாகவும் ஒரு புத்தகத்தை அச்சிடலாம் – அல்லது ஒருமுன்னுரையை எழுதி விடலாம் – என்று இப்போதுதான் தெரிந்தது.

வண்ணன்

## கலை உலக வழிகாட்டிகள்

# கலையரசும் கலையருவியும்

தமிழ் நாடக உலகின் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் இருவர் ஒருவர் நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம். மற்றவர் பருத்தித்துறையூர்ப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. கலையரசு சொர்ணலிங்கம் தன் ஒப்பற்ற நடிப்பு மூலம் நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றுவதன்மூலம், நாடக உலகில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்; நாடகக் கலை வளர்த்து தன வாழ்நாள் எல்லாம் அயராது உழைத்தார். அது மட்டன்று, இன்றும் புகழுடன் விளங்குகின்ற நடிகர் குழாம் ஒன்றை உருவாக்கினார் நாடகமே இவரின் இதயத்துடிப்பு; நாடகமே இவரின் பேச்சும், மூச்சும் செயலும்.

கலையருவி கணபதிப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்ப் பணியாற்றியவர், அதுமட்டன்று. தமிழியல் ஆய்வில் புதிய சிந்தனையை, புதிய போக்கை, புதிய பரம்பரையைக் கலையருவி கணபதிப்பிள்ளை உருவாக்கினார். பட்டம் பதவிகள் எல்லாம் அவரை வந்து சேர்ந்தன. இதனால் அவர் பெருமைப்பட்டது கிடையாது பட்டம் பதவி எல்லாம் உயர்மட்டம், ஆனால் அவர் எப்போதும் சமுதாயத்தால் அடிமட்டத்திலிருக்கும் பொதுமக்களைப்பற்றியே எண்ணுவார்.

தலைசிறந்த மொழியியல் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தவர் கலையருவி கணபதிப்பிள்ளை; ஆகவே அவர் சொல்வார்; "மக்கள் இல்லாமல் மொழி இல்லை." இந்த விழுமிய கோட்பாடே அவரின் வாழ்க்கையின் அடிக்கல்லாக இருந்தது. இதனால் இவர் பலரின் பாராட்டையும் பெற்றார். தலைசிறந்த எழுத்தாளராகவும் இவர் திகழ்ந்தார். எனவே இவரை இன்று இலக்கிய முன்னோடி எனப் பலரும் பாராட்டுவர்.

கலையருவி கணபதிப்பிள்ளையும் கலையரசு சொர்ணலிங்கமும் தமிழ்நாடக உலகின் முன்னோடிகள். இப்படியாக இருவரும் தத்தம் துறையில் முன்னோடிகளாக அமைந்து புதுவழியைச் சமைத்தனர். இந்தப் புதுவழியை இருவரும் ஏன் பின்பற்றினர் என்பது சுவையான ஆராய்ச்சிப் பொருள், இதனைச் சற்று நோக்கலாம்.

கலையருவி கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்து பருத்தித் துறையைச் சேர்ந்த தும்பளையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் இளமைப் பருவத்தில் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் களரியில் வளர்ந்தவர். அங்கு களரி ஏறும் கூத்துக்கள் பலவற்றையும் கண்டு களித்தவர். இதனால் நாட்டாரியலில் இவருக்கு இளமையில் பெரும் நாட்டம் ஏற்பட்டது. இது வாழ்நாள் முழுவதும் நீடித்தது.

திண்ணைப்பள்ளி மரபில் தும்பளை முத்துக்குமாரசாமி தேசிகரிடம் தமிழையும் வடமொழிக் கல்வியையும் பெற்றார் இவர் மேலும் இவரின் தமிழ்மொழி அறிவு வளர்ச்சிக்குத் துணையாக இருந்தவர் இவரின் தந்தையார் ஆயுள்வேத வைத்தியர் கந்தசாமிப் பிள்ளை. இக்காலக் கல்வியை இவர் பருத்தித்துறைக் காட்லிக் கல்லூரியில் பெற்றார். பல்கலைக்கழகக் கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கிஞ்சு பெரிந்தசிகரிடம் பெற்றார் தேசிகர் சிறந்த தமிழ் நாடக அபிமானி; தமிழ் நாடகங்களையும் தேசிகர் எழுதியுள்ளார் கலையருவி கணபதிப்பிள்ளை பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார். அங்கு இவரின் வழிகாட்டி முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் விபுலானந்த அடிகளார். இதனால் கலையருவியின் நாடக ஈடுபாடு மேலும் வளர்ந்தது

இதன் பின்னர் கலையருவி இலண்டன் மாநகர் சென்று ஒப்பற்ற மொழி இயல் நிபுணர் பேராசிரியர் சேர். இருல் புளோனரிடம் தன் ஆய்வு அறிவைப் பெற்றார். இலண்டனில் தங்கி இருக்கும் போது நாடக மேதைகள் இப்சன், பெர்னாட்சோ போன்றவர்களின் நாடகங்களில் பெரிதும் ஈடுபட்டார் இலங்கை திரும்பிய பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். பேச்சுத் தமிழில் நாடகங்களை எழுதி அரங்கேற்றிப் பலரின் பாராட்டையும் சிலரின் தூற்றுதலையும் பெற்றார் இவர்.

த. சண்முகசுந்தரம்

பேச்சுத்தமிழ் என்றால் கிராமியக் குப்பை என்பது அப்போது ஒரு சாராரின் கருத்து பேச்சுத் தமிழ் சார்ந்த உரையலற்றுச் செந்தமிழ் நாடகம் சங்கிலியை இவர் படைத்தார். செந்தமிழ் மாணிக்கமாலையையும் இவர் தீட்டினார்

இவரின் நாடகங்கள் மேடை ஏறிப் பெரும் புகழ் ஈட்டின தான் எழுதிய நாடகங்களுக்குத் தானே நெறியாளராக அமைந்தார் இவருக்குத்துணையாக இருந்து உழைத்தவர் கலைமாமணி பேராசிரியர் சு. வித்தியானந்தன். இவ்விருவரின் கூட்டு முயற்சி நாடக உலகிலே பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. பின்னை நாளில் பேராசிரியர் வித்தியானந்தன் நாட்டாரியலில் பெரும் மாற்றங்களைத் துணிந்து கொண்டுவந்தார். இவை இன்று வரலாற்றுப் புகழ் பெற்றவை ஆகி விட்டன

கலையருவிபோலவே கலையரசும் தன் துறையில் புதுமையைப் புகட்டினார் இவரின் தந்தையார் தலைசிறந்த நாடகச் சுவைஞர். மற்றவர்கள் நடிப்பதைத் தூண்டி விட்டவர். தன் கைப் பொருளைச் செலவு செய்து நாடகங்களை அரங்கேற்றுவித்தவர்; இவரின் வீடே கலைக் கோயிலாக நவாலியில் திகழ்ந்தது. இந்தச் சூழ்நிலையில் வளர்ந்த கலையரசு இளமையிலே கலையுலகிலே புகுந்தார். அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாசனை நடித்தவர் கலையரசு, தன் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் பெற்றார். பரியோவான் கல்லூரியின் விழுமிய பாரம்பரியமும் பரந்தபோக்கும் கலையரசின் வாழ்விலே நிலைத்து விட்டன உத்தியோகம் பார்ப்பதற்குக் கொழும்பு சென்ற கலையரசு நாடக மேதை பம்மல் சம்பந்த முதலியாரைத் தனது குருவாகக் கொண்டார். நாடக உலகின் பெரும் மாற்றங்கள் கலையரசு சொர்ணலிங்கத்தை மையமாகக் கொண்டு உருவாகின. இன்று வையாவும் நாடக

—7-ஆம் பக்கம் பார்க்க

வளவை வள்ளவன்

# நிழல் தேடும் நெஞ்சங்கள்

அவளுக்கு என்னதான் நடந்து விட்டது. ஏன் இப்படி ஆனாளோ? இப்படித்தான் கூடியிருந்த உறவினர் தமக்குள் குசுகுசுத்துக் கொண்டனர். ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டதைப்போல எல்லோரது விழிகளும் அவளின் முகத்தில் தான் நிலைகுத்தி நின்றன.

ஆரும் பகைகாரர் அப்பிடி... இப்பிடியெண்டு ஏதும் செய்திருப்பினமோ? இப்படி ஒரு அபிப்பிராயம்.

சீ சீ... அப்பிடியொண்டுமில்லை... இவள் நெடுக ஆலடிப்பக்கத்தாலை தான் அந்தோனியாரிட்டைப் போறவள்... அதுதான்... அந்த ஆலடியான்ரை சேட்டைதான் இது. இது இன்னொரு குரல்.

ஆனால் அவள்... இந்தக் குரல்களுக்கெல்லாம் செவிமடுப்பதற்குத் தயாராக இல்லை. தன்னை அறியாமலேயே சிரிப்பதும் மிரண்டு விழிப்பதும் எதையோ தேடுவதும் முணுமுணுத்துச் சிரிப்பதுமாகத் தான் இருந்தாள்.

அன்ரன் மட்டும் எதையுமே பொருட்படுத்தாது குறித்த நேரங்களுக்கொப்ப மாத்திரைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

அன்ரன் நீ ஒருக்கா கோசித்துறை பேதுருப்பிள்ளையிட்டை இவளைக் கொண்டேக் காட்டு இது ஒரு வருத்தமுமில்லை; ஏதோ ஒரு பிசாசின்ரை குறைபாடு போலைதான் இருக்கு. பேதுருப்பிள்ளை எந்தப் பிசாசையும் ஓட்டிவிடுவார். இந்த விசயத்திலை அவர் மகாவீரன், இப்படியொருத்தர் தன் கண்டுபிடிப்பையும் பரிகாரத்தையும் எடுத்தியம்பினார்.

அன்ரன் சிரித்தான்...

ஏன் தம்பி வைரவ கோயில் பூசாரியிட்டை ஒரு நூல் முடிவிச்சுப் பார்த்தாலென்ன. ஆலடிப்பிசாசெண்டால் வைரவற்றை நூலுக்கு நிண்டிடும்...

சும்மா குழந்தைப் பிள்ளைக் கதை கதையாமலிருங்கோ...

ஒண்டுக்கும் ஒத்துவராமல் நீ அவளை என்ன சாக்காட்டப் போறியே. தம்பி பெரிய மனிசர் சொல்லுறதைக் கேள். இல்லாட்டில் அந்தோனியாற்றை வாசலிலை கொண்டு போய் விட்டுவிடு. நல்லா அவரிலை பழியைப் போட்டிட்டு செபி. அன்ரனின் தாய் திரேசம்மா சொல்லி விட்டு மூக்கை சீறிக் கொண்டாள்.

எல்லாம் முடிந்த நிலையில் தான் இப்படி கிடக்கிறாள் என்பதை இவர்கள் அறியாதவர்கள் தானா?

ஏன் இப்படியானாள் என்பதைக் கூட இன்னும் புரிந்து கொள்ளவில்லையே என்று எண்ணிய அன்ரன் அவர்களுக்காகப் பச்சாதாபப்பட்டான்.

## இவ்வாரக் கதையமுதம்

அவள் பெயர் ரீட்டா அலைபோன்ற நீண்ட கருங்கூந்தல். முழுநிலவிலும் கறையுண்டு. அவள் முகத்தில்...? தேடினும் கிடைக்காது. அத்தனை பேரழகி ரீட்டா; அதனால் தான் முப்பத்தேழு வயது வரை காத்திருந்து கல்யாணம் செய்து கொண்டாள் போலும் இந்தக் கல்யாணத்திற்குக்கூட அவள் சம்மதித்திருக்க மாட்டாள். தங்கை ஹேமாவின் மகள் பிறேமா பெரிசாகி விட்டாள். கல்யாணங்களை ஆயிரம் காரணங்காட்டித் தடுத்து விடலாம். ஆனால் இயற்கையின் இந்த மலர்ச்சியைத் தடுத்துவிட முடியுமா? அப்படி ஒரு வழியிருந்து அது ரீட்டாவிற்கும் தெரிந்திருந்தால் நிச்சயமாக இந்தக் கல்யாணமும் நடந்திருக்காது. ரீட்டாவின் தம்பி டானியலும் தனக்கென்று ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.



தன்னழகிற்கு இணையான அழகனைத் தேடி எத்தனையோ மாப்பிள்ளைகளைத் தட்டிக் கழித்துக் கொண்டிருந்த ரீட்டாவின் வயதுகளை வயதுகள் விழுங்கிக் கொண்டிருந்த போது இப்படியொரு சந்தர்ப்பமா? எப்படியோ ரீட்டாவிற்குக் கல்யாணம் நடந்து விட்டது.

மாப்பிள்ளை அன்ரன் ஒரு பஸ் றைவர்; தேசிக்காய் போன்ற நிறம் ஓரளவு செம்பிரமான முகத்திற்கு எடுப்பான அரும்புமீசை பார்ப்பதற்கு ஓகோவென இல்லா விட்டாலும் ஓரளவு அழகன் தான். அன்ரன் தன் இளமைக் காலத்தின் பெரும் பகுதியை மதுவோடும் மங்கையோடும் தான் கழித்து விட்டான். இந்த அநுபவங்களால் பெண் மீது வெறுப்பையும் அர்த்த மற்ற சந்தேகங்களையும் சூழ் நிலை அவனுக்கு ஏற்படுத்தியிருந்தது. இதனால் தனது நாற்பது வயதுவரை கல்யாணம் செய்யாதிருந்து பட்டுக்கழித்து கல்யாண பந்தத்திற் புகுந்தான்.

துருவங்கள் இணைவதேயில்லை ஆனால் மனிதர்கள்...? என்னதான் மாறுபாடானவர்களானாலும் திருமணப் பந்தத்தால் இணைந்து விடுகிறார்கள். இப்படியாக இணைபவர்களால் தான் புவியில் துன்பங்கள் மலிந்து விட்டன போலும்; மனித மனந்தானே, மனித மனம் மாறக்கூடியது மாற்றப் படக் கூடியதும் தானே. இல்லையென்றால் விலைப்பொருளாகப் பெண்மையை எண்ணிய ஒருவனும் அழகிருந்தால் எதையும் சாதித்து விடலாமென்று எண்ணிய ஒருத்தியும் இப்படி இணைந்திருக்க முடியுமா?

அன்ரன் ரீட்டா திருமணம் முடிந்து மூன்றாண்டுகள் ஓடி மறைந்து விட்டன. பேர் சொல்ல ஒரு குழந்தை இதுவரை கிடைக்கவேயில்லை. இப்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஏழுமணிப் பூசைக்கு அந்தோனியாரைத் தரிசிப்பதற்காக இருவரும் நிற்கின்றனர்.

அக்கா நாலு பிள்ளைகளின் தாய். தங்கைக்கு ஆறு குழந்தைகள். அக்காவின் பிள்ளையள் கல்யாணம் செய்யப் போகிறார்கள். அவர்களும் பிள்ளை பெறப் போகிறார்கள். ஆனால் நான்... நான்...

ஏக்கங்கள், வேண்டுதல், எதிர்பார்ப்புகள்.

அன்ரன் கண்களை மூடி விழிகளைக் கரைத்துக் கொண்டிருந்தான்: மனதாலும் கர்த்தரை எண்ணியிராத அவன் இப்போது பிரார்த்திக்கின்றான். கண்ணீரால் அர்ச்சிக்கின்றான். நெஞ்சாரச் செபிக்கின்றான்.

தேவரீருக்குப் பொருந்காத பாவத்தைச் செய்தபடியினால் முழுமனதுடனே விசனப்படுகிறேன். இனிமேல் சுவாமி தேவரீருடைய உதவியினாலே ஒருபோதும் பாவஞ் செய்யேனென்றும் பாவங்களுக்கடுத்த உதவி முகாந்திரங்களெல்லாம் விடுவேனென்றும் கெட்டி மனதுடனே பிரதிக்கினை பண்ணுகின்றேன்.

தன்னை மறந்து அழுது தீர்த்தான் அன்ரன். ரீட்டா மட்டும் என்ன தேங்கிநிற்கும் ஆசைகளையெல்லாம் ஒன்றாக்கித் தன்னை மறந்து துதித்தாள்; நெஞ்சத்தில் சுமையாகக் கிடக்கும் தன் எண்ணத்தை ஈடேற்ற பிரார்த்தித்தாள். அந்த ஜீவத்துடிப்பில் அவள் இதயத்தில் ததும்பிய ஏக்கங்கள் பெருமூச்சாகி காற்றோடு காற்றாகக் கலக்கின்றன.

"பரமண்டலங்களி லிருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரமண்டலங்களிலே செய்யப்படுமாப் போல பூமியிலேயும் செய்யப்படுவதாக அன்றன்றுள்ள எங்களப்பம்எங்களுக்கு இன்று தாரும்".

ரீட்டாவின் உடலில் தன்னையறியாத ஒருவித சிலிர்ப்பு...

அன்ரன்ரீட்டா தம்பதிகளின் விண்ணப்பமும் வேண்டுதலும் குழந்தையே தேவை ஏற்படும் போது தம் ஆசைச் சிறைக்குள் தேவனைச் சிறைப்படுத்தி எப்படியோ தமது தேவைகளைப் பெற்றுவிடத்தானே மனிதர்கள் துடிக்கிறார்கள். மனிதர்கள் சுயநல நோக்கில்தான் தேவனையும் படைத்தார்களோ?

தேவன் பாவங்களை வேண்டிக் கொண்டாலும்... கொடுப்பதில் ஏதோ அளவு முறையை வைத்துள்ளான் போலும்! அதனால்தான் உள்ளவர் சிலராகவும் இல்லாதார் பலராகவும் உலகில் இருக்கின்றார்களோ? இல்லார் எல்லார்க்கும் தேவன் கொடுக்கும் நாள் உலகில் வாராதோ?

பூஜை முடிந்து வெகு நேரமாகி விட்டது. தேவாலயத்திற்கு வந்திருந்தோரெல்லோருமே சென்று விட்டனர். ரீட்டாவும் அன்ரனும் மட்டும் இன்னமும் எழுந்திருக்கவேயில்லை.

கண்ணீர்ச் சுரப்பிகள் ஓயும் வரை அவர்கள் அழுது தீர்த்துக் கொண்டனர்.

பாதர் லோறன்ஸ் எங்கோ புறப்படுகின்றார்.

பாதர்... ரீட்டாதான் முதலில் அழைத்தாள். அன்ரனும் சேர்ந்து கொண்டான்.

என்ன பிள்ளையள் என்ன நல்லா அழுது தீர்த்திருக்கிறியள். பாதரின் கருணை நிறைந்த வார்த்தைகளைத் தொடர்ந்து முறையீடுகள் நடந்தேறின.

"ம்...... துயரப்படுபவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேற்றப்படுவார்கள்." நீங்கள் நிச்சயமாக உங்கள் முயற்சியில் வெற்றிபடைவீர்கள் தேவனுக்கு முறையிட்டு அவனை நன்றாக மன்றாடுங்கள்— அத்தோடு... சற்று நிறுத்தி எதற்கும் ஒருமுறை ஒரு நல்ல டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்ளுங்கள். மறுமுறைப் பூசையில் உங்களுக்காக நானும் வேண்டிக் கொள்கிறேன். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் என்ன சரிதானே— பாதர் நடக்கிறார்.

ஏதோவொரு புதிய நம்பிக்கையொளி ரீட்டா அன்ரனோடு டாக்டர்களை நாடினாள்.

"தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்" அவள் தேடினாள் குழந்தையென்ற நிழல் வேண்டிப் பரிசோதனைகள்...

ஆய்வுகள்...

சிகிச்சைகள்...

முடிவு பூஜ்ஜியம் தான். எத்தனையோ டாக்டர்கள் பார்த்து விட்டனர். எல்லோரது முடிவுகளும் ஒன்றுதான்.

கருவளம் இல்லை காலம் கடந்து விட்டது? தேவனே உன்னை வேண்டிக் கொண்டதும் பிரார்த்தித்துச் செபித்ததெல்லாம் வீண்தானா?

தேவன் மனிதன் கேட்பதையெல்லாம் கொடுப்பாரா? அப்படியென்றால் இல்லாமை எப்போதே இல்லாதொழிந்துவிடுமே?

ஆனாலும் மனிதர்கள் பலவீனமானவர்கள்.

அன்ரன் இப்போது எதைப் பற்றியுமே சிந்திப்பதில்லை. ஆனால் ரீட்டா... அவள்தான் இப்படி ஆகிவிட்டாளே!

ஆஸ்பத்திரியில் இருக்கும் ரீட்டாவைப் பார்க்க உறவினர்கள் தினமும் வந்து செல்கின்றார்கள்.

(யாவும் கற்பனை)

## குட்டிக் கதை

# குரங்காட்டியும் குரங்கும்

யோ. பெ.

ஒரு குரங்காட்டி காட்டுக்குச் சென்று ஒரு குரங்கைப் பிடித்து வந்தான். அதன் அரையில் சங்கிலியால் கட்டி அதை வளர்த்து வந்தான்.

குரங்காட்டி சங்கிலியில் அதைக் கட்டின நாட்தொடக்கம் அது தன்னை அக்கட்டில் இருந்து விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தது குரங்காட்டியைக் கண்டதும் பாய்ந்து நகங்களால் பிய்த்துப் பற்களால் அவனைக் கடித்துக் குதறத் துடித்துக் கொண்டிருந்தது.

குரங்கின் அட்டகாசத்தைக் கண்ட குரங்காட்டி அதற்கு முதலில் பிரம்பால் அடித்துப் பயமுறுத்தினான்; அது அடங்கவில்லை.

'இது ஒரு நாளைக்குச் சங்கிலியை அறுத்துக் கொண்டு போகும்' என்று அவன் யோசித்தான். அன்று தொடக்கம் குரங்கிற்கு அடிப்பதைக் குறைத்து அன்பு காட்டத் தொடங்கினான். அது சங்கிலியை அறுக்க முற்படும்போது அதன் கிட்ட வந்து தலையைத் தடவி அதன் அரையில் இறுகியுள்ள சங்கிலிக் கட்டை அவிழ்ப்பதுபோல் பாசாங்கு செய்வான். பின்பு எழுந்து "கொஞ்சம் பொறு" என்று கையால் காட்டிவிட்டுச் செல்வான்.

அவன் செய்கையில் மனம் மகிழ்ந்த குரங்கு 'இவன் நாளைக்கு வந்து என்னை அவிழ்த்துவிடுவான், இவன் ஒரு நல்லவன்' என்று எண்ணிக் கொள்ளத் தொடங்கியது.

குரங்காட்டியும் ஒவ்வொரு நாளும் அவ்வாறு செய்துவிட்டுச் சென்று விடுவான்.

அவன் தயவில் நம்பிக்கை வைத்த குரங்கு அட்டகாசம் செய்யாமல் அமைதியாகக் கிடந்தது.

கொஞ்சக்காலம் சென்றது பெண்குரங்கு தன் ஆணைத் தேடிக் காட்டில் இருந்து வந்தது ஆண் குரங்கு சங்கிலிக் கட்டில் அமைதியாகக் கிடப்பதைக் கண்டு விட்டு கோபத்துடன் திரும்பிச் சென்றது.

அது தனியாக வருவதைக் கண்ட குரங்குக் கூட்டம் 'அவன் போராடுகிறானா? வாருங்கள் நாம் அவனுக்கு உதவி செய்வோம்' என்று கூறிப் புறப்பட்டது.

"பயனில்லை அது சாகும் வரை அடிமைதான்" என்றது பெண் குரங்கு.

'ஏன்' என்றது குரங்குக் கூட்டம்.

'அது தன் சுதந்திரத்திற்கு குரங்காட்டியின் தயவில் நம்பிக்கைவைத்துவிட்டது' என்று பெண் குரங்கு சினத்துடன் கூறியது.

(நன்றி: தனிச்சோதி)

# அண்டப்புளுகன் கோயபல்ஸ் 9

இதற்குப் பிறகு, கோயபல்சின் உள்ளத்தை வெகுவாகக் கொள்ளை கொண்டவளும், அவனால் மறக்கவும் வெறுக்கவும் முடியாத அளவு அவனை மயக்கத்திலும், துக்கத்திலும் ஆழ்த்திய வளுமான ஒருத்தி பிரபல ஜெர்மன் திரைப்படப் பேரழகி லிடா பாராவோ என்பவளாகும். ஜெர்மன் ரசிகர்களின் அபிமானத்துக்குரிய நாயகன்-நடிப்பிசை மன்னன், ப்ரோலிச் என்ற தலைசிறந்த கதாநாயகனோடு, இவள் நாயகியாக நடித்துப் பெரும் புகழ் பெற்றவள். திரையில் மட்டும் அந்த நடிகனுக்கு அவள் காதலியாக இருக்கவில்லை. வாழ்க்கையிலும் அவர்களிருவரும் காதலர்களாகவே இருந்தனர். "செக்கஸ்லோவேக்கியா' நாட்டு ஜெர்மன் திரையுலகிற்களித்த சீதனம் அவள்.

சிவந்த நிறமும், வளர்ந்த உடலும், சற்றே படர்ந்த முகமும், அதிலே பரந்த விழியும், அவள் நிறைந்த அழகைச் சொல்லும். அவள் கண்ணெடுத்துப் பார்த்து நின்றால், காமன் கணையெடுத்து விட்டது போல் கொல்லும். அவள் அழகி; அவ்வளவு பேரழகி.

அதிகாரத்திற்கு வந்து ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய கோயபல்ஸ், சதிகாரனை மாறி, யூதர்களைப் பழிவாங்கத் தொடங்கிய சமயமது. ஒரு யூத வியாபாரியின் பெரிய மாளிகையைப் பறிமுதல் செய்து, அதில் அவன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் தான், அந்தநடிகை, லிடாபாராவோ வசித்து வந்தாள். அண்டை வீட்டுக்காரியான அவளை, கோயபல்சின் மனைவியான மக்தா மரியாதைக்காக ஒரு நாள் விருந்திற்கழைத்திருந்தாள். அவளும் வந்தாள். விருந்துண்ண வந்திருந்த அந்த விழியழகியை, பருந்து விழிப் பார்வையாளனான கோயபல்ஸ் பார்த்தே விட்டான் தனிமையாக அவளை அழைத்து, மிக இனிமையாகப் பேச ஆரம்பித்தான்.

"உங்கள் சொற்பொழிவுகள் மிகச் சுவையாக இருக்குமாமே, நான் அதைக் கேட்டதே இல்லை" இப்படித்தான் கேட்டாள் அவள். "அதைச் சொற்களினால் வர்ணிக்க இயலாது லிடா; காது குளிரக் கேட்க வேண்டிய கருத்து விருந்தல்லவா அது" இப்படிச் சொல்லிய அந்தக் 'கலைமகள்

## காமத்தின் கதாநாயகன்

## விவாகரத்தில் மகாவிண்ணன்

வின் இளைய மகன்'' அவளுக்கு வலைவிரிக்கத் துவங்கினான். "நானும் உங்கள் கூட்டத்திற்கு நானும் வரட்டுமா" அவள் மீண்டும் கேட்டாள். "கரும்பு தின்னக் கூலியா? நீ கண்டிப்பாக வா. நானே உன்னை அழைத்துச் செல்லுகிறேன், என்ன?" இறங்கிய சுதியில், ஏக்க நிலையில் அவன் அவளைப் பார்த்தான்.

மறுநாள், கோயபல்ஸ் வழக்கமாகக் கூட்டத்திற்குப் புறப்படும் நேரத்திற்கு முந்தியே, லிடாவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஆனால் வழக்கமாக அவன் பிந்திவரும் நேரந்தாண்டியும், இன்னும் கூட்டத்திற்கு வரவில்லை!

எங்கேபோனான், 'கொள்கை வீரன்' கோயபல்ஸ்?

அவன், அந்த அழகான நடிகை லிடா பாராவோவை அழைத்துக் கொண்டு ஒரு அறைக்குள் சென்றான். அவளையே சற்று நேரம் உற்றுப் பார்த்தான்! அவள் வேர்த்து நடுங்கினாள்; இவன் அவளைச் சேர்த்து நெருங்கினான். அவள் இதழ்கள் துடித்தன; இவன் இதழ்கள் அதைச் சுவைத்தன.

ஒரே ஒரு முத்தந்தான். ஆனாலும், அதில் ஓராயிரம் உணர்ச்சிக் கதைகள் இருந்தன. நடிகை நடுங்குகிறாள் என்பதைக் கண்டதும், கோயபல்ஸ் அவளையும் கூட்டிக்கொண்டு அந்தக் கூட்டத்திற்கு வந்து விட்டான். கூட்டத்தில் அவன் பேசிக் கொண்டிருந்தபோதே, அவளை முத்தமிட்டதால் அவன் உதடுகளில் படிந்த 'லிப்ஸ்டிக்' கறையை ஒற்றியெடுத்த கைக்குட்டையை கைகளில் எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டான்! கைக்குட்டையில் புதைந்திருந்த "காதல் ரகசியம்" இவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த லிடா ஒருத்திக்குத் தானே தெரியும்?

சில நாட்களில், "செக்கஸ்லோவேக்கியா" பெற்றெடுத்த அந்தச் சொக்கத்தங்கம், இவனுக்கே சொந்தமானாள். அவளின் காதலனாக இருந்த அந்தப் புகழ் பெற்ற நடிகனையும் அவள் கைவிட்டு விட்டாள்.

நாடாளும் அமைச்சனாக இருந்த கோயபல்ஸ், அந்த நடிகையோடு கொண்டிருந்த கூடாத காதலை, ஹிட்லர் உட்பட எல்லோருமே அறிந்திருந்தனர். அவன அந்த நடிகையோடு வாழ்ந்த இரண்டு ஆண்டுகளும், தன் வாழ்க்கையின் சுவைமிகுந்த இன்ப நாட்களென்று சொல்லுகிறான். லிடா என்ற அந்த நடிகையோடு அவன் கொண்டிருந்த காதல், உண்மையானது, உணர்ச்சி நிறைந்தது என்று அவனை விமர்சிக்கும் ஆசிரியர்களும் சொல்லுகின்றனர்.

நடிகையோடு தன் நாயகன் நடத்திய பகிரங்க லீலைகளைக் கண்டு மக்தா-மிகவும் வருந்தினாள், சலிப்படைந்தாள். இதனால் அவளுக்கும், அவள் கணவனுக்கும் நாளுக்கு நாள் கசப்பு வளர்ந்தது. ஏற்கனவே விவாகரத்து விவகாரத்தில் அனுபவமுடைய இவள், கோயபல்சிடம் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த ஒருவன் மூலமே அத்தாட்சிகளைச் சேகரித்து, கோயபல்சின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறத்திட்டமிட்டாள்.

இதையறிந்த ஹிட்லர், இந்த விவகாரத்தில் மிகவும் தலையிட்டு, அரும்பாடுபட்டு, கோயபல்ஸ், மக்தா மனஸ்தாபத்தை நீக்கி அவர்களுக்கு மறுமுறையே ஒரு திருமணத்தைப் பண்ணிவைத்தான். இந்தத் திருமணத்தில், ஹிட்லரும் பக்கத்தில் நின்று கொண்டிருந்த காட்சியோடு கூடிய படம் மறுநாளைப் பத்திரிகைகள் அனைத்திலும் வெளியாயின.

நிலைமை வெகுவாக முற்றிவிட்டது என்பதையுணர்ந்த ஹிட்லர், அப்போது அகிலத்தையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த தனது அதிகாரத் தொனியில் கோயபல்சுக்கு ஆணையிட்டான்; அவன், எக்காரணத்தைக் கொண்டும் இனி, அவனது ஆசை நாயகி லிடா பாராவோவைச் சந்திக்கக் கூடாதென்று. தாங்க முடியாத இந்தப் பேரிடியைக் கேட்டதும் கோயபல்சின் தளராத நெஞ்சே தளர்ந்தது. தாழாத தலையே தாழ்ந்தது; சிந்தாத கண்களே சிந்தின. எதையும், எடுத்தேன், கவிழ்த்தேன்,

### ● 'தி' எழுதுவது

சுவைத்தேன் என்று எறிந்து விட்டுச் செல்கிற அவனால், ஹிட்லர் இட்ட இந்தக் கட்டளையை மட்டும் ஏற்கவே முடியவில்லை. கண்கள் கலங்கின; வார்த்தைகள் குளறின. அவன் ஹிட்லரிடம் கெஞ்சாத குறையாகக் கேட்டான்.

"எனக்கு இருக்கின்ற செல்வங்கள் எல்லாவற்றையுமே நான் இழந்து விடுகின்றேன். நான் வகிக்கின்ற பதவிகள் அனைத்தையுமே துறந்து விடுகின்றேன். ஹிட்லரின் 'ஸ்வஸ்திக' கொடி ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் ஜெர்மானிய எல்லைக் கோட்டை விட்டே நான் தாண்டிச் சென்று விடுகிறேன். என் லிடாவை மட்டும் எனக்குக் கொடுத்து விடுங்கள். அவள் இல்லாவிட்டால் எனக்கு வாழ்வே இல்லை" இப்படி அவன் கெஞ்சிக்கேட்டான்.

யுத்தவெறியும் ரத்த வெறியுங் கொண்டலைந்த ஹிட்லர் இதைக் கேட்டதும், பித்த வெறியில் கோயபல்ஸ் பிதற்றுகிறான் என எண்ணிப் பெருஞ் சிரிப்புச் சிரித்தான் — இந்தக் கோரிக்கையையும் மறுத்தான். அந்தநடிகைக்கும் கடுமையான

—6-ஆம் பக்கம் பார்க்க

● உருவகக் கவிதை

## காக்கையும் குயிலும்

— நவாலியூர்க் கவிராயர் —

ஊருக்கப்பா லுள்ளவோர் மரத்தி லாங்கே
உறுதியான கூடுகட்டி வாழும் காகம்!
நேரெதிராய் பரந்துள்ள கிளையில் நாளும்
நேரமஃது மாலையிலாம் வந்தி ருந்த
பாரதிரப் பாட்டிசைக்கும் குயிலின் நெஞ்சில்
பாரமெனும் தலைக்கனமும் ஏறிக் கூத்த
கூரலகைத் திறந்தது கூறு கின்ற
கூரியசொல் லீட்டியேகி காகம் வாடும்!

காலமதில் கருவுற்ற குயிலுக் கந்தோ
காத்துஅதைக் கொள்ளுகின்ற பெருமை இல்லை!
ஞாலமதில் தோன்றியதோர் வழிவ ழியே
ஞாபகமாய் முட்டையதைக் காகக் கூட்டில்
கோலமுறப் போட்டுமீளும் நாளி லெல்லாம்
கோபமின்றித் தாய்மையென்ற தானம் நல்கி
ஞாலமீதில் உயர்வதுவும் உற்ற காகம்
ஞானவொளி கொண்டதனால் மேன்மை கொள்ளும்!

தன்மையதைக் கண்டிருந்த குயிலும் இன்று
தன்தவறை உணர்ந்துடன் திருந்தி யுள்ளம்
புன்மையுற்று போனவழி மாற்றி இட்போ
புரிந்தவத் தவறையெண்ணி வெட்கி யுள்ளே
தன்னையிழந் திடுகின்ற காலந் தன்னில்
தாய்மையதன் மேன்மையால் வாழும் காகம்!
முன்னிலையை மீண்டிடத்தக் குயிலும் கூவும்
முன்னேயொரு தூசியாய்க் காணும் காகம்!

## பிராணிகள் தோற்றமுள்ள விநோத தாவரங்கள்

அரியாலையூர்
வி. என். எஸ். உதயசந்திரன்

தமது வாழ்க்கையில் ஒரு பகுதியைப் பிராணிகள் போலவும் மற்றொரு பகுதியைத் தாவரங்கள் போலவும் கொண்டுள்ள சில விநோத தாவரங்களைப்பற்றி அறிந்திருக்கின்றீர்களா?

இப்படியான விநோத தாவரங்களில் ஒன்றுதான மைசடோசோவா (Mycetozoa) ஆகும். சில உயிர் நூல் வல்லுனர்கள் இதனைப் பிராணிகள் வகையில் தான் சேர்க்க வேண்டும் எனக் கருதுகின்றனர். இருப்பினும் இதை ஒரு தாவரமாகக் கருதுவதே பொருத்தமாகும்.

மழை நாட்களுக்கு பிறகு கீழே விழுந்து கிடக்கும் ஈரமான மரக்கட்டைகளைக் கூர்ந்து கவனித்தால் நாம் இதைக் காணலாம்.

உக்கிப் போன அல்லது பயன்படாது கிடக்கும் மரக்கட்டைகளின் முனைகளில் இது நன்கு வளர்கின்றது. மஞ்சள் அல்லது வெண்மை நிறத்தில் முட்டையின் வெள்ளைக் கரு போன்ற அமைப்பில் ஜெல்லியைப் போல இது காணப்படும். இதன் ஒருமுனை சிறிது தடித்திருக்கும், கூர்ந்து அவதானித்துப் பார்த்தால் இதன் நடுவே கயிறு போன்ற நரம்புகள் அங்குமிங்கும் காணப்படுகின்றன.

இதில் அதிசயம் என்னவெனில் இத்தாவரம் நகர்ந்து செல்கிறது. ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! இதன் நகரும் வேகம் மிகவும் குறைவாக உள்ளது.

மரக்கட்டைகளின் வெளிப்புறத்தில் இது ஊர்ந்து செல்லும் போது இதற்குப் பிடிக்காத ஏதேனும் வழியிலிருப்பின் அது தன்னுடைய பாதையை மாற்றிக் கொள்ளும் சில சமயங்களில் கட்டையிலுள்ள பிளவுகளினூடாக இறங்கி மறைந்து விடும்.

இவ்வாறு அது எங்கு செல்கிறது? அல்லது ஏன்செல்லுகிறது இதற்கு உயிரும் உண்டு வளர்ச்சியும் உண்டு. மரக்கட்டையின் மீது ஊர்ந்து செல்லும் பொழுது அதன் மீதுள்ள பக்டீரியாக்களையும் உக்கிப்போனபொருட்களையும் இது உணவாக எடுத்துக் கொள்கிறது.

இது ஒரு மிகப்பெரிய அமீபாவைப் போல இயங்குகிறது. உண்மையிலே இது ஒருவகைக் காளான் அல்லது பூஞ்சணம் ஆகும்.

இது உருமாறி பிராணி நிலையிலிருந்து தாவர நிலையை அடைவது பெரும்பாலும் இரவில் தான் நடைபெறும்.

இது பற்றி ஆராய்ச்சி செய்துள்ள ஹட்சின்ஸ் என்பவர் ஒரு நாள் இரவு முழுவதும் விழித்திருந்து இத்தாவரத்தில் உண்டாகும் மாற்றங்களை ஒரு உருப்பெருக்கியின் உதவியால் கவனித்து குறிப்பெடுத்துள்ளார் அவர் குறிப்பெடுத்த விபரங்கள் வருமாறு:

மாலை மூன்று மணியளவில் ஒரு உக்கிப்போன மரக்கட்டையில் வெண்மையான ஜெல்லி போன்ற அமைப்புடன் இது காணப்பட்டது.

3 30 மணியளவில் அவதானித்த போது, ஜெல்லி உருவம் அரை அங்குலம் நகர்ந்து வந்து பிறகு வேகம் குறையத் தொடங்கியது.

5 மணிக்கு இது சிறிது திரட்சியடைந்து மேல்மட்டத்தில் சிறு முடிச்சுக்களைக் கொண்டுள்ளதாகக் காணப்பட்டது.

7. 30 மணியளவில் இயக்கம் நின்று விட்டது. கட்டிகள் போன்ற திரட்சிகள் நன்றாகத் தெரிகின்றன.

8. 30 மணியளவில் அவதானித்த போது, இன்னும் தெளிவாக புலனாகிறது இது தாவர நிலையை அடையத் தொடங்கியுள்ளது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

10 30 மணிக்கு கட்டிகள் வெண்மையான பளபளப்பான ஊசிகள் போன்று மாறியுள்ளன.

அதிகாலையில் 1 30 மணிக்கு ஊசிகள் நீளமாக வளர்ந்து "ஸ்போராஞ்சியா" என்ற நிலையை அடைந்துவிடுகின்றன.

3 30 மணியளவில் வெண்மையாக இருந்த ஸ்போராஞ்சியாக்கள் பழுப்பு நிறத்தை அடைந்துள்ளன. இந்நிலையில் இது முற்றிலும்தாவர நிலைக்கு வந்துவிட்டது.

ஸ்போராஞ்சியா நுண்ணியவையாகலால அவற்றை உருப்பெருக்கியின் உதவியால்பார்த்தால் தான் அவற்றின்அமைப்பு நன்கு தெரியும்.

இவற்றிலே 400க்கு மேற்பட்ட வகைகள் உள்ளன. சிறிய பறவைக் கூண்டுகள் போலவும் பறவையின் இறகுகள் போலவும் இன்னும் எத்தனையோ வகையான உருவங்களில் இவை காணப்படுகின்றன.

சிவப்பு, மஞ்சள், ஓரெஞ், பழுப்பு, கறுப்பு முதலிய பல்வேறு நிறங்களிலும் கூட

-6-ஆம் பக்கம் பார்க்க

# மதியும் பிறையும்

## அக உணர்வுகளுக்கே முக்கியத்துவம் வழங்கும் குப்பிளான் ஐ.சண்முகன்

(முல்லைமணி)

1968ஆம் ஆண்டு பேராதனையில் குப்பிளான் ஐ. சண்முகனைச் சந்தித்தேன். அப்பொழுது அவர் பட்டதாரிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். இராஜவத்தையில் ஒரே மேசையில் இருந்து உணவருந்தும் போது அவருடன் பழக நேர்ந்தது. அப்போது தன்னை ஓர் எழுதுவினைஞர் என்றே அறிமுகம் செய்திருந்தார். மிகவும் சொற் செட்டுடன் உரையாடும் இயல்புடைய இவர் ஓர் எழுத்தாளர் என்று அறிந்து கொள்வதற்குப் பல நாள் பழக வேண்டியிருந்தது.

1977 இல் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் இவரை மீண்டும் சந்தித்தேன். எனது சொந்த அலுவலகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நான் அடிக்கடி கல்வித் திணைக்களத்திற்குச் செல்ல வேண்டியிருந்ததால் இவ் எழுத்தாளரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. 1976 இல் "கோடுகளும் கோலங்களும்" என்னும் சிறுகதைத் தொகுதியொன்றை வெளியிட்டிருந்த இவர் அதன் பிரதியொன்றை எனக்கு அன்பளிப்புச் செய்தார். சில ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த இவர் கல்முனைக்கு மாற்றப்பட்டார் என்று அறிந்தேன்.

இலங்கையிலே சாஹித்திய மண்டலம் என்னும் அமைப்பு எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களுக்குப் பரிசளித்து வந்தது. இந்த அமைப்பு கடைசியாக 1976 இல் தமிழ் எழுத்தாளரின் நூல்களுக்குப் பரிசளித்தது. அதன் பின்னர் இயங்காமலே நின்று விட்டது. பின்னர் கலாசார அமைச்சின் கீழ் இயங்கிய சாஹித்திய மண்டலத் தமிழ்ப் பிரிவை பிரித்தெடுத்து பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. தினபதி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களின் தலைமையில் மதியுரைக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் நான்கு ஆண்டுகள் வெளிவந்த தமிழ் நூல்களைப் பரிசீலனை செய்து முப்பது எழுத்தாளருக்குப் பரிசு வழங்கத் தீர்மானித்தனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடக்கம் இளைய தலைமுறை எழுத்தாளரான அ. பாலமனோகரன் வரை நான்கு தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பரிசு பெற்றனர். பரிசு பெறுவோர் பட்டியல் பத்திரிகைகளில் வெளி வந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலே இப் பரிசில்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என ஒரு இயக்கம் செயல்பட்டது. பரிசு பெறவிருந்த எழுத்தாளர்களுக்கு இது குறித்துத் தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

குப்பிளான் ஐ. சண்முகனும் 'கோடுகளும் கோலங்களும்' என்னும் சிறுகதைத் தொகுதிக்குப் பரிசு பெறவிருந்தார். பரிசை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை எனச் சிலரும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என வேறு சிலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். இது பற்றிச் சண்முகனிடம் கருத்துக் கேட்டேன். 'பகிஷ்கரிக்க வேண்டும் என்று வாதிடுபவர்களின் கருத்து வலுவடைந்து வருகின்றது' என்று கூறினார். 1984 இல் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. பரிசை நேரிலே பெற குப்பிளான் சண்முகன் சமுகமளிக்கவில்லை.

1984 இல் மீண்டும் அவரைக் கொழும்பில் சந்தித்தேன், புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களான சேவை முன் பயிற்சியொன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. இப்பயிற்சியை நடத்தும் விரிவுரையாளரில் ஒருவராக நானும் சென்றிருந்தேன். அங்கு சண்முகன் பெட்டி தலையணை சகிதம் வந்திருந்தார். யாராவது உறவினரைப் பயிற்சிக்காக அழைத்து வந்திருப்பார் என்று நினைத்தேன். வினவிய பொழுது 14 ஆண்டுகள் வகித்த எழுதுவினைஞர் பதவியை விட்டு ஆசிரியராகப் போகிறேன் என்றார். எனது தலைமையில் இலங்கை வானொலியில் இடம் பெற்ற "மாதுறுவில் தேங்கிய மாவலியாள்' என்னும் கவியரங்கில் பங்கு கொண்டு சிறப்பித்தார்.

### வாழ்க்கை

1946 ஆவணியில் பிறந்த இவரது முழுப்பெயர் ஐயாத்துரை சண்முகலிங்கம். புனை பெயர்கள்: 'குப்பிளான் ஐ. சண்முகன்', சண்முகன், கணபதி ஆகியவை. குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாசாலை, புன்னாலைக்கட்டுவன் மெ. மி. ஆங்கில பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இலங்கைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் ஓர் கலைப்பட்டதாரி. கொழும்பு, யாழ்ப்பாணம், கல்முனை ஆகிய இடங்களில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்த இவர் தற்போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார். இவரது பாரியாரும் ஓர் ஆசிரியரே. திருமணம் செய்த பின்னர் கரணவாய் தெற்கில் வசிக்கின்றார்.

### எழுத்துலகப் பிரவேசம்

படிக்கும் காலத்திலேயே பாடசாலைச் சஞ்சிகைகளில் கதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ள போதும் ராதா என்னும் வார வெளியீட்டில் இவரது 'பதி' என்ற சிறுகதை பிரசுரமாகிய 1966ஆம் ஆண்டையே எழுத்துலகப் பிரவேச ஆண்டாகக் கொள்ள வேண்டும் என்கிறார். இக்கதையை ஏழாலை மகாஜன வாசிகசாலையில் அச்சில் கண்டாராம். எவ்வளவோ முயன்றும் அதன் பிரதியைப் பெறமுடியவில்லை என இன்றும் கவலைப்படுகின்றார். தொடர்ந்து சுதந்திரன், ஈழநாடு, வீரகேசரி, அஞ்சலி, மல்லிகை ஆகியவற்றில் இவரது கதைகள் பிரசுரமாகின. ஈழநாடு பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது பைத்தியங்கள் என்ற கதைக்கு ஆறுதல் பரிசுகிடைத்தது. தென்னிந்திய நர்மதா வெளியீடாக 'சாதாரணங்களும் அசாதாரணங்களும்' என்னும் நூல் வெளி வந்துள்ளது.

ஆரம்பகாலத்தில் ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகள் எழுதியுள்ளார். "மரபுக் கவிதை, புதுக் கவிதை என்ற பாகுபாடு எனக்கில்லை. வடிவம் எதுவாக இருந்தாலும் உணர்வைத் தொடுவன எல்லாம் கவிதைகளே" என்கிறார்.

ஒப்பீட்டு ரீதியிலும், திறனாய்வு ரீதியிலும் அலை, மல்லிகை, வீரகேசரி ஆகியவற்றில் பல கட்டுரைகள் வெளி வந்துள்ளன. திரைப்படம், ஓவியம் தொடர்பான கட்டுரைகளும் எழுதியுள்ள இவருக்குச் சங்கீதத்திலும் ஈடுபாடுண்டு 'அலை' சஞ்சிகையின் ஆரம்ப கால ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த இவர் வானொலிக்கெனப் பல சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளார்.

"வாழ்வின் பல்கோண முகத்தோற்றங்கள் என்னை எழுதத் தூண்டுகின்றன. உலக உண்மையைப் புரிந்து கொள்வதனால் ஏற்படும் பரவசமும் விடுதலையுமே இலக்கியக் கலையின் பயன் என நம்புகிறேன்" என்கிறார். "என்னை இலக்கியத் துறையில் ஈடுபட உந்து விசையாக இருந்தவர்கள் எனது நண்பர்களும் பெரியோர்களுமே. பாடசாலைக் காலத்திலேயே யாழ் இலக்கிய நண்பர் கழகத்தை அமைத்து அதன் மூலம் இலக்கியச் சர்ச்சைகள் செய்துள்ளோம்."

### கதைப்பண்பு

குப்பிளான் சண்முகனின் கதைகளில் வரும் பாத்திரங்களின் இயக்கத்தை விட அவற்றின் அக உணர்வுகளுக்கே கூடிய முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. சில நிகழ்ச்சிகள் உணர்வோட்டங்கள் சிதறலாகவே இருக்கும். எதையும் விஸ்தாரமாக எடுத்துக் கூற இவர் முனைவதில்லை. வாழ்க்கையிலே பற்றோ பிடிப்போ இல்லாத, வாழுகின்ற சமுதாயத்தோடு ஒட்டி வாழமுடியாத விரக்தியடைந்த பாத்திரங்களை அதிகமாக இவரது கதைகளில் சந்திக்க முடியும். கதையின் தொனிப் பொருளை அறிய வேண்டுமானால் இவரது கதைகளைப் பல முறை வாசித்தே ஆக வேண்டும். காதல் கதைகள் முற்றுப் பெறாத காதலையே பொருளாகக் கொண்டுள்ளன. காதலில் தோற்றுப் போன ஒருவன் தான் தோற்றுவிட்டதாகக் கருதவில்லை. மௌனகீதம் என்னும் கதையின் கதாநாயகன் கூறுகின்றான்:

"நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துவிட்டதாக எல்லோரும் சொல்கிறார்கள். எனக்கு அதில் நம்பிக்கையில்லை. நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவில்லை. எங்களைப் பிரிக்க ஒருவராலும் முடியாது. நாங்கள் அமரத்துவமான காதலர்கள். என்னுள் அவள் இருக்கிறாள் அவளுள் நான் இருப்பேன், நிச்சயமாக இருப்பேன். நாங்கள் புறவாழ்வில் ஒன்றாக இருக்க முடியாது என்று அறிந்தபோது — இந்தச் சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மீற முடியாது என்று உணர்ந்தபோது நாங்கள் அதை எதிர்த்துப் புரட்சி செய்யவில்லை. எங்களுக்குப் புரட்சி செய்ய வலுவில்லை; நாங்கள் புரட்சிக்காரர்கள் அல்ல நாங்கள் கலைஞர்கள் —"

கதைப் பொருள் எதுவாக இருக்கலாம் எனினும் சர்ச்சைக்குப் பதிலளிப்பது போல அமைந்துள்ளது இவரது கதையில் வரும் உரையாடல்.

எழுத்தாளர் சண்முகன் மிக அருமையாகவே தன் பேனாவைப் பயன் படுத்துகின்றார்.

---

# நாய்க்கு வரும் நோய் மனிதனுக்கே ஆபத்து

வீட்டில் செல்லப் பிராணியாக நாயை நாம் வளர்க்கின்றோம். இந்நாயுடன் வீட்டில் உள்ள அனைவரும் பழகுகிறார்கள். நாய்க்கு கவனத்தோடு தடுப்பு ஊசி போட்டிருந்தால், நாயுடன் பழகுவதைப்பற்றிக் கவலைப்படவேண்டியது இல்லை. ஆனால் தடுப்பு ஊசி போடாத காரணத்தினால் நாய்க்கு வெறி நோய் வரலாம். வெறிநோய் பற்றிய நாய் மனிதனைக் கடிக்கவரும். அதன் மூலம் மனிதனுக்கு ஏற்படும் நோயே வெறிநாய்க்கடி என்று அழைக்கப்படும்.

ஒரு நாய் கடித்துவிட்டால் அது கடித்த இடத்தை நன்றாகச் சோப்பு போட்டுக் கழுவி 'கார்பாலிக்' அமிலத்தை அதன்மேல் தடவ வேண்டும். அத்துடன் வாய்ப்பூட்டு நோய் வராமல் தடுக்க 'டெட்டனஸ் டாக்ஸாயிட்' என்ற ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும். நாய்க்கடிக்கு ஆளானவர்கள் கடிக்கு ஏற்றவாறு தினமும் ஒரு தடுப்பு ஊசி வீதம் பத்து நாட்களுக்கு ஊசிபோட்டுக் கொள்ள வேண்டும். கடித்த நாய் வெறிநாயாக இல்லாது இருப்பின் ஐந்து நாட்களுக்கு மட்டுமே ஊசி போட்டுக்கொள்ளலாம்.

கடித்த நாய் வெறிநாயா, இல்லையா என்பதை எவ்வாறு அறிவது?

கடித்த நாயைத் தனியாகக் கட்டிப்போட்டு வெறி உள்ள நாய்தானா என்று பார்த்தல் வேண்டும். வெறி நாயைத் தெருக்களில் நடமாட விடுதல் கூடாது. உடனே கொன்று விடவும் கூடாது கடித்தநாய் வெறிநோய் உள்ளதாயிருந்தால் சில நாட்களிலேயே இறந்துவிடும். வெறிநோய் இல்லாத நாயாய் இருந்தால் நாம் அளிக்கும் உணவை உண்ணும். இறந்த விடாது.

நோய்கண்ட நாய் இறந்துவிட்டால் அப்பிராணியின் சடலத்தை ஆழக்குழிதோண்டி புதைத்துவிடவேண்டும் இல்லையேல் அழித்துவிட வேண்டும். ஏனெனில் அதைத் தின்னும் மற்ற பிராணிகளுக்கும் வெறி வரும்.

> வெரித்தாஸ் வானொலியில் இக்கட்டுரை ஒலிபரப்பப்பட்டது. தொகுப்பு: மிருசுவில் பி. கிறிஸ்ரி றஞ்சன். கட்டுரை ஆக்கம்: டாக்டர் எஸ், நரேந்திரன். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

---

### காமத்தின்....

—5-ம் பக்கத் தொடர்

கட்டுக் காவலை விதித்தான். இந்தப் பிரிவுக்குப் பிறகு, அவன் இந்த உலகிலிருந்தே பிரிவதற்கு முன்னால், அவனும் மறக்கவே முடியாத அந்த நடிகையை, ஒரு முறை - ஒரே ஒரு முறைதான் பார்த்தான் ஆனால், அவளிடம் ஒரு வார்த்தை பேசக்கூட சுதந்திரமில்லாதவனாக அப்போது அவன் இருந்தான். ஒரு நாள் மாலை, அவசமணிந்த தனது காரிலே வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தபோது அவனது காருக்குப் பின்னால், அவனது அன்புக் காதலி, அந்த நடிகையின் கார் வருவதைக் கண்டான். காரின் வேகத்தைக் குறைக்கும்படிக் காரோட்டிக்குக் கட்டளையிட்டான்.

காரின் வேகம் குறைந்தது. அதற்குள் அவனது காதலியின் காரும் இவன் காருக்கு பக்கவாட்டில் மெதுவாக வந்தது. இவன் மீது உயிரையே வைத்திருந்த அந்த உயிரோவியத்தால், காரிலிருந்து தான் இவனைக் காண முடிந்தது. இவன் நிலையும் அப்படியே! நெருங்க முடியாத அந்த நெஞ்சங்களின் வேதனையை, கசிந்து மல்கிய அவர்கள் கண்கள் காட்டின. கண்ணீர் பொழிந்து கொண்டிருந்த கண்களும் கண்களும் சந்தித்துக் கொண்ட அந்தக் கடைசிச் சந்திப்பும், ஒரு நிமிடம் - ஒரே ஒரு நிமிடந்தான் நிகழ்ந்தது. அதற்குப் பிறகு அவன் அவளைப் பார்க்கவே இல்லை; அவள் அவனைக் காணவே இல்லை.

---

### பிராணிகள்....

—5-ம் பக்கத் தொடர்

இவை அமைந்துள்ளன. இந்த ஸ்போராஞ்சியாவில் ஸ்போர்கள் எனப்படும் மிக நுண்ணிய விதைகள் உள்ளன. இவ்விதைகள் காற்றில் மிதந்து சென்று ஈரமுள்ள இடங்களில் முளைக்கின்றன.

ஸ்போராஞ்சியாவை உலர்த்தி காட்சிசாலைகளில் கூட வைக்கலாம். நன்கு அவதானமாக பார்த்தால் நூறு வருடங்களுக்கு மேல் கூட இவை நல்ல நிலையில் இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

---

### இலங்கையின்....

—3-ம் பக்கத் தொடர்

ஒன்றினை முன்னதாகப் பெற்றிருக்கக் கூடிய சந்தர்ப்பங்களை நழுவச்செய்தன என்று கல்வியியலாளர் கருதினர். இந்நிகழ்ச்சிகள் அமைப்பியல் வடிவில் உருவப் போராட்டமாயின என்ற விமர்சனமும் உண்டு.

பிரதேச அடிப்படையில் யாழ்ப்பாணப் பகுதியிலே வளர்ச்சி பெற்ற முதலாம் நிலைக் கல்வி இரண்டாம் நிலைக் கல்வி என்பவற்றைத் தொடர்பு படுத்தி முழுமை செய்வதற்குரிய பல்கலைக்கழகம் அவசியம் என உணரப் பெற்றது. 1958 ஆம் ஆண்டு நியமிக்கப்பெற்ற கலாநிதி நீட்காம் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பல்கலைக்கழக அனுமதி இன, பிரதேச அடிப்படையில் இருத்தல் தகாது என்றும், தகுதியுடைய மாணவர் அனைவருக்கும் அனுமதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்கலைக்கழக வளாகங்களை ஆரம்பித்தல் வேண்டுமென்றும் வலியுறுத்தின.

தகுதியுள்ள அனைவருக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பெற வேண்டுமானால் கொழும்பிலும், காலியிலும், யாழ்ப்பாணத்திலும் பல்கலைக் கழகங்களைத் திறக்க வேண்டிய திருக்க முறைத் தேவை ஜயசூரிய ஆணைக்குழுவினாலும் வலியுறுத்தப்பெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கல்விப் பின்னணியில் ஒரு முழுநிறைவான பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் கல்வியியலாளர்களினால் வற்புறுத்தப்பட்டு வந்தவேளை இலங்கைப் பல்கலைக் கழக அறிவியற் பீடங்களிலே தமிழ் மாணவர்களின் உள் நுழைவு வரலாற்றுக் காரணிகளினால் அதிகரித்துச் சென்றமை இலங்கையில் ஏற்கனவே வேரூன்றியிருந்த இனவாரியான சிந்தனைகளுக்கு மீள் அழுத்தங்கள் கொடுத்தன.

1971 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் இளைஞர்கள் மேற்கொண்ட வன்முறைகளும் பட்டதாரிகளிடத்து நிலவிய வேலைதேடல் நெருக்கடிகளும், பல்கலைக் கழக அமைப்பியலை மீளாய்வு செய்யத்தூண்டின.

(மிகுதி அடுத்த வாரம்)

உ
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

அருளிச் செய்த

## கோளறு பதிகம்

(ஆருவது பாடல்)

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனேடும் உடனுய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனுல்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

ஒளியையும் கோடுகளையும் உடைய புலித்தோலாடையையும் கட்டின கோவணத்தையும் உடைய இறைவர் புதிய மலர்களோடு கூடிய வன்னியையும் கொன்றை மாலையையும் கங்கையையும் திருமுடியிற் சூடி உமாதேவியாருடன் எழுந்தருளி வந்து அடியேனது உள்ளத்தில் புகுந்த காரணத்தால், கொலைத் தொழில் வாய்ந்த சிங்கம், புலியோடு கொல்லுகின்ற யானை, பன்றி கொடிய பாம்பினேடு, கரடி, மனிதத்தன்மை வாய்ந்த குரங்கு ஆகிய இவைகள் திருத்தொண்டர்களுக்கு மிகவும் நல்லன, நல்லன அவைகள் நல்லன நல்லன என்றவாறு.

இத்திருப்பாட்டால் சிங்கம் புலி முதலான மிருகங்கள் யாவும் நல்லனவாதல் கூறப்பட்டது.

### கலையரசும்...

—3-ம் பக்கத் தொடர்

உலகில் நிலைத்து விட்டன. இது பாராட்டுதற்குரியது. கலையரசு மறைந்தாலும் அவர் உருவாக்கிய புதிய போக்கு இன்னும் நாடகக் கலைஞரை வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றது.

இற்றைக்குக் கிட்டத்தட்ட நாற்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள் பிற்பகல் நூல் ஒன்றை வைத்துக் கொண்டு கலைஞர் ஒருவர் இருக்கையில் இருந்தபடி வாசிக்கின்ருர்; உரத்து வாசிக்கின்ருர்; பின்னர் கெக்கட்டம் விட்டுச் சிரிக்கின்ருர்; இடையிடையே எழுந்தும் உலாவுகின்ருர்; மேடையில் நடப்பது போல நடக்கின்ருர்; மெல்லச் சிரிக்கின்ருர்; 'அச்சா! அருமை! அற்புதம்!' எனவும் பாராட்டுகின்ருர். வாயைக் கோணிக் கோணிப் பேசுகின்ருர். குடை ஒன்றை எடுத்துத் தன் கமுக்கட்டில் வைத்துக்கொண்டு நடக்கின்ருர். அப்பொழுது குடும்பப் பெண் ஒருத்தி ஒரு கிளாசிலே தேநீர் கொண்டு வருகின்ருர். தேநீரை வைத்துவிட்டுப் போனுல் இந்தக் கலைப்பித்தர் குடிக்காமலே வைத்துக்கொண்டிருப்பார். கிளாசைக் கையிலே கொடுத்துவிட்டுப் போனுல் ஒன்றில் தேநீர் நிலத்திலே தளம்பி சிறறப்படும் அல்லது கிளாசு நிலத்திலே விழுந்து உடைந்து போகும். இந்தக் கலைப்பித்தர் இப்படிப் போட்டு உடைத்த கிளாசுகள் பல. எனவே அந்த அம்மையார் மிகவும் பக்குவமாகப் பிரதியைத் தன் அன்புக்கணவர் கையில் இருந்து வாங்குகின்ருர். கிளாசை அவரிடம் கொடுக்கின்ருர். "குடித்துவிட்டுப் பின்னர் வாசியுங்கள்!" என அன்புக்கட்டளை போடுகின்ருர். இது "குடும்பநாடகம்" நாடக நாயகன் நவாலியூர் சொர்ணலிங்கம்; நாடக நாயகி திருமதி சொர்ணலிங்கம். நாடகப்பிரதி கலையருவி கணபதிப்பிள்ளை எழுதிய "உடையார் மிடுக்கு" திருமதி சொர்ணலிங்கம் போய்விட்டார்.

"இதற்குப் பொருத்தமானவன் எங்களுடைய பையன் செல்வரத்தினம்" என்கிருர் சொர்ணலிங்கம் உரத்த குரலில், அதாவது "உடையார் மிடுக்கில்" வரும் உடையார்தான், இந்த உடையார் இக் காலச் 'சகுனி', 'குரலை உயர்த்தித் தாழ்த்திப் பேசவும் உடையார் போல நடக்கவும் நடிக்கவும் தகுந்தவர் இன்றைய திருநெல்வேலி விதானையார் செல்வரத்தினம் என்பது கலையரசின் கணிப்பு. இந்தக் கணிப்பு வீண் போகவில்லை. 'உடையார் மிடுக்கு' முதல் முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 1942ஆம் ஆண்டில் அரங்கேறியது. நாடகம் பெரும் வெற்றி. விதானை செல்வரத்தினத்தின் நடிப்பும் மிகவும் அற்புதமாக அமைந்தது.

கலையரசு விரும்பினுல் தானே உடையாராக நடித்திருக்கலாம்; ஆனுல் அவர் நாடகத்தில் வரும் கலியாணத் தரகராகவே நடித்தார். தன் சீடப் பிள்ளைக்கு முதலிடம் வழங்கும் பண்பு கலையரசிடம் உண்டு. இதனை இந்தக் காலத்துத் தமிழ் அறிஞர்கள் கவனிப்பாராக! தன் சீடர்கள் முன்னுக்கு வருவதையே கலையரசு விரும்பினுர். சீடர்களை நசுக்கும் போக்கு அவரிடம் ஒருபோதும் இருக்கவில்லை.

கலையருவி கணபதிப்பிள்ளை-கலையரசு சொர்ணலிங்கத்தின் தொடர்பு இத்துடன் நிற்கவில்லை. அதன் பின்னர் இது வளர்ந்தது. எத்தனையோ சந்திப்பு; எத்தனையோ உரையாடல்; எத்தனையோ அளவளாவுதல். கலையருவி கணபதிப்பிள்ளையின் "சங்கிலி நாடகம்" கொழும்பு பல்கலைக் கழகத்தில் அரங்கேறியது. இதனை வந்து பார்வையிட்டுப் பாராட்டியவர் ஒருவர் கலையரசு சொர்ணலிங்கம். இந்த நாடகம் நூல் வடிவில் வர வேண்டும் எனப் பெரிதும் விரும்பியவர் அரசியல் தலைவர் தந்தை சாமுவேல் ஜேம்சு வேலுப்பிள்ளை செல்வநாயகம். இதனை ஆதரித்தவர் அரசியல் முதல்வர் வைத்திய கலாநிதி இலங்கை நாகநாதன். இவர்களை ஆதரித்தவர் கலையரசு சொர்ணலிங்கம் சங்கிலி நாடகம் அச்சேறுவதற்குரிய பொறுப்பை ஏற்றவர் அறிஞர் செல்வநாயகம் தன 'சுதந்திரன்' அச்சகத்தில் இதனை அச்சேற்ற அவரே நடவடிக்கை எடுத்தார்.

கலையருவி கணபதிப்பிள்ளை, கலையரசு சொர்ணலிங்கம் போன்ற கலைஉலக வழிகாட்டிகள் இன்றும் எமக்குத் தேவை. கலை உலகில் இறப்பை நோக்கிச் செல்லும் ஒரு சமுதாயம் வாழத் தகுதியற்றது; ஏன்? அரசியலும்கூட இச்சமுதாயம் விரைவில் இறப்பை நோக்கிச் செல்லும். இதுவரலாறு கண்ட உண்மை.

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா கருத்து

# ஈழ விடுதலை போராட்டத்தில் இந்தியா வகுக்கும் பங்கு!

எமது போராட்டத்தில் இந்தியாவின் பங்கு என்ன என்பதையும் எமக்கும் இந்தியாவுக்குமிடையில் நிலவுகின்ற நட்புறவின் முக்கியத்துவம் பற்றியும் இங்கு நான் குறிப்பிடுவது அவசியமாக உள்ளது. அது எமது இன்றைய தீர்மானத்தை நன்கு தெளிவாக விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இந்தியா எவ்வளவு தூரம் செயல்பட்டு வந்துள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

இந்தியா கொள்கை ரீதியில் எமது போராட்டத்தை இதுவரை அங்கீகரிக்காதிருக்கலாம். ஆனுல் இந்தியா மனித உரிமைகள் என்ற அடிப்படையில் வழங்கி வந்துள்ள ஆதரவானது ஈழ விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த கட்டத்தினை நோக்கி நகர்த்துவதற்கு உதவியாக இருந்திருக்கின்றது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

சர்வதேச ரீதியில் இந்திய அரசானது எந்த ஒரு முகாமையும் சேர்ந்ததாக இல்லாவிடினும், அது சர்வதேச விடயங்களில் சோஷலிச நாடுகளினதும் குறைவிருத்தி நாடுகளினதும் பக்கமே நிற்கின்றது.

அனைத்து சோஷலிச நாடுகளும் பெரும்பான்மையான குறைவிருத்தி நாடுகளும் இந்தியாவுடனுன நட்புறவுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

இதே வேளை அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகள் கூட அரசியல் ராஜதந்திர ரீதியில் இந்தியாவைப் பகைத்துக் கொள்ள தயாராக இல்லை.

சர்வதேச ரீதியில் அதுவும் முக்கியமாக இந்திய உபகண்டத்தில் இந்தியாவின் முக்கியத்துவம் முன்னிலையில் நிற்கின்றது.

எமது போராட்டத்திற்கும் உலக நாடுகளுக்கும் இடையே இருக்க வேண்டிய இருக்கக் கூடிய உறவு பற்றிய எமது மதிப்பீட்டாய்வில் இந்தியா பற்றிய மேற்குறிப்பிட்ட விடயங்கள் மிகவும் கவனத்திற்குரியவையாகும்.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு இருக்கின்ற மிகப் பெரிய பலம் ஈழ மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்புறவே ஆகும். இந்தியாவின் நட்புறவை நாம் பேணுவதற்கு சில வேளைகளில் சில தற்காலிக விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டியிருக்கும்; சில நட்டங்களையும்கூட ஏற்றுச் செயற்பட வேண்டியிருக்கும்.

ஆனுல் நாம் ஓரடி பின்னுல் செல்வதென்பது ஈரடி முன்னுல் செல்வதற்கே என்பதை ஒவ்வொருவரும் மனதிற் கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இருக்கக்கூடிய இருக்கவேண்டிய உறவு தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு தான் நடாத்திவரும் பிரச்சாரங்களின் மூலம் அது ராஜதந்திர ரீதியிலான எதிர்ப்புத் தாக்குதல் நிலையைக் கொண்டிருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் பிரச்சாரத்திற்கு எதிராக நாமும் சரி இந்திய அரசும் சரி தற்பாதுகாப்பு நிலையையே கொண்டிருக்கின்ருேம்.

> "போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்" என்ற தலைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் கடந்த மாதம் பிரசுரமொன்றை வெளியிட்டது. இதன் தலைவர் க. பத்மநாபாவினுல் எழுதப்பட்ட இந்நூலின் ஒரு பகுதியை இங்கு பிரசுரம் செய்கிருேம்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது திறமையான பிரச்சாரம் மூலம் இந்தியாவோ அல்லது ஏனைய நாடுகளோ எமது போராட்டத்திற்கு அரசியல், ராணுவ ராஜதந்திர ரீதியில் உதவி செய்து விடாமல் காத்து வருகின்றது.

இவ்வளவு தூரம் அரக்கத்தனமான கொடுமைகளைப் புரிந்த—புரிந்துகொண்டிருக்கின்ற ஸ்ரீலங்கா நவபாசிஸ்டுகள் இந்த ஒரு விடயத்தில் கெட்டித்தனமாக இருப்பதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்காது. அவர்களின் நிலையைத் தலைகீழாக மாற்றியமைக்க வேண்டியது எமது போராட்டத்திற்கு மிக அவசியமாக உள்ளது.

"இந்தியாவின் நட்பையும் மீறி நாங்கள் போராடுவோம்" என்று யாராவது கூறுவார்களாயின், அது எமது யதார்த்தத்துக்குப் புறம்பான அதீத துணிச்சல் மனுேபாவத்தின் வெளிப்பாடேயாகும்.

அவ்வாருன நினைப்பானது ஒன்றில் எம்மை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அல்லது நீண்ட கால அடிப்படையில் ஈழப்போராளிகளை சர்வதேச பிற்போக்குவாதிகளின் கையில் வீழ்த்திவிடும்.

சர்வதேச ரீதியில் ஈழ விடுதலைப் போராட்டம் இன்று வகித்துவரும் முற்போக்கான பாத்திரத்தைத் தொடர்ந்தும் வகிக்க வேண்டுமாயின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியா இன்று கொண்டிருக்கும் சர்வதேச நிலைமைப்பாட்டை மாற்றுத வரை நாமும் அதனுேடு நட்புறவுடன் இருப்பது அவசியமாகும்.

தமிழ் நாட்டு மக்கள் எமது போராட்டத்திற்கு பேருதவியாக இருந்து வந்திருக்கின்றனர். இன்றும் இருந்து வருகின்றனர்.

கொடிய ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாக அதனுேடு நாங்கள் யுத்த நிறுத்தம் - பேச்சுவார்த்தை என ஈடுபடும் போது தமிழ்நாட்டு மக்கள் எம்மீது சில சந்தேகங்களைக் கொள்ள இடம் இருக்கின்றது என்பதை உணர்கிறேன்.

எனினும், நாங்கள் இதுவரை கடந்து வந்துள்ள கடூரமான பாதைகள், செய்து வந்துள்ள தியாகங்கள், ஈழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கொண்டுள்ள உறுதி என்பன தமிழ் நாட்டு மக்களிடம் எழுந்திருக்கக் கூடிய அச்சந்தேகங்களை மிகக் குறுகிய காலத்தில் நீக்கும் என நான் திடமாக நம்புகிறேன்.

இவ் விடயத்தில் தமிழகத்தின் தலைவர்களும் மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த அனைவரும் எமக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.

ஈழ மக்களின் நலனும் இந்தியாவின் நலனும் முரண்பாடற்றதாக இருக்கும்வரை ஈழ விடுதலைப் போராட்டத்தையும் இந்திய நட்புறவையும் முரண்பாடடைய விடாமல் பாதுகாத்துக் கொள்வதுஎமது தலையாய கடமையாகும்.

# பிறருக்கு உதவுங்கள்

நாம் இவ்வுலகுக்கு வந்தது பிறருக்கு உதவுவதற்கேயாம் என்று ஆல்பேட் எயின்ரைன் பலமுறை எழுதியுள்ளார். நாம் இங்கே பிறந்த நாள் முதல் நமக்கு உதவியவர்கள் பலர். இத்தனை பேரின் உதவிகளைப் பெற்று உருவான நாம் இனிமேல் மற்றவருக்கு உதவுவதற்குத் தயங்குதலாகாது.

பிறருதவியால் தாம் உருவான வழியில் நம் உதவியால் பலர் உருவாதல் வேண்டும். இது நியதியும் கடமையுமாகும். நம் சிறுவர் சிறுமியர் பயிலும் சுற்ருடற் கல்வியில் எமக்கு உதவுவோர் பற்றி அறிகின்ருர்கள். அறிந்தவர்கள் தாமும் பிறர்க்கு உதவும் வழிகளை நன்ருக அறிதல் வேண்டும் முன்னர் இரண்டாம் மகா யுத்தம் நடந்த காலத்தில் ஜேர்மன் நாட்டில் அழிந்த கோயில்கள், மண்டபங்கள் மாளிகைகள், மனைகள் எத்தனையோ இன்னும் திருத்தப்படாமல் இடிபாடு அழிபாடுகளோடு மண்மூடிக் கிடக்கின்றனவாம். ஆனுல் அந்நாட்டு மக்கள் உலகிலிருந்து அகதிகளாய் எங்கும் புகலிடம் என்றேங்கித் தவித்து இடம்பெயர்ந்து அங்கே தஞ்சம் புகுந்ததும தாராளமாக அள்ளிக் கொடுத்து ஆதரிக்கிருர்கள்.

சந்திரனில் மறுவுண்டு அது அந்தக் குறையிருளை நீக்கக் கருதாது உலகின் நிறையிருளை நிலவினுல் நீக்குகிறது பிறருக்கு உதவும் பெருவாழ்வின் பருத்தித்துறைப் பிரதிநிதி துரைரத்தினம் அவர்களுக்கு ஓரிடம் இலங்கையில் கிடைக்காத திராட்சையினம் இங்கே பரவும் வகை செய்தவர் அவர். பனம் விதைகள் பரவக் காரணராய் இருந்து பல்லாயிரக் கணக்கில் ஆண்டுதோறும் உபகரித்தவர்கள் பலர். மரவள்ளித் தடிகளை நாம் ஊரெங்கும் உபகரிப்பதற்கு உதவியவர் இணுவில் பண்டிதர் சபாஆனந்தர்.

முருங்கைத்தடியில் ஓரளவு சாதனை செய்தவர் தெல்லிப்பழை சித்தம் சபாரத்தினம் அவர்கள். இன்னும் கொக்குவில் மேற்கு விதானையார் வ. கந்தையா அவர்களும் பருத்தித்துறை அதிகாரி மார்க்கண்டு அவர்களும் பெருமன

...8-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

## யாழ்தேவியை அலங்கரித்த அஞ்சலிச் சுவரொட்டிகள்

(மிருசுவில்)

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்ற 'யாழ்தேவி'யின் இருமருங்கையும் வர்ணச் சுவரொட்டிகள் அலங்கரித்தன. ஜூலை இனக்கலவரத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளே யாழ்தேவியில் வரிசையாக ஒட்டப்பட்டிருந்தன. குறிப்பிட்ட இந்த ரயிலே கடந்த இரண்டு தினங்களாக மறித்து வைக்கப்பட்டிருந்ததாகும். கொழும்பு செல்லும்வரை சகல புகையிரத நிலையங்களிலும் பெரும் தொகையானோர் இதனைப் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.

இடிஅமீனிடமிருந்து ஆட்சியைப் பறித்த

# உகண்டா ஜனாதிபதிக்கு எதிராக ராணுவச் சதி!

# மில்டன் ஒபேட்டே மர்மமான முறையில் மறைவு

(கம்பாலா)

உகண்டாவில் ஜனாதிபதி மில்ரன் ஒபேட்டேவுக்கு எதிராக இரத்தம் சிந்தாப் புரட்சி இடம்பெற்றதாக கம்பாலா வானொலி நேற்று அறிவித்தது.

குறிப்பிட்ட வானொலி அறிவிப்பில் ஒரு ராணுவ லெப்டினன்ட் பேசியதாகவும், அவர் தன்னை யார் என அடையாளம் கூறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புரட்சி பற்றி வேறு விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

கடந்த ஒரு வாரகாலமாக அரசுக்கு விசுவாசமான படையினருக்கும், ராணுவத்தில் உள்ள சில கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் கலவரம் நடைபெற்றதாகவும் தெரிய வருகிறது.

உகண்டாவின் வட பகுதி தற்போது இராணுவத்தின் வசம் இருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மில்டன் ஒபேட்டே எங்கிருக்கிறார் என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை.

1979 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி இடி அமீனை ராணுவப் புரட்சி மூலம் வெளியேற்றிவிட்டு, மில்டன் ஒபேட்டே பதவியைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

வானொலியில் இதனை அறிவித்தவர் பிரிகேடியர் ஒகெல்லோ எனவும், ஒபேட்டே கென்யாவுக்கு சென்றிருக்கலாமெனவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி ஜெயில்சிங்கின் தமிழ்நாட்டுச் சுற்றுலா

பாரதம் ஒரு துணைக்கண்டமாக இருக்கிறது இங்கு பல மொழி பேசுபவர்களும், பல மதத்தை தழுவியவர்களும் இருப்பதால் நம்மிடையே வேற்றுமையில் ஒற்றுமை ஏற்படவேண்டும் என இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங் நேற்று சென்னையில் பஞ்சாபிகள் சமூகத்தினரின் பாடசாலைக் கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பேசிய ஜனாதிபதி பல மொழிகளைக் கற்றுக் கொள்வதால் தமிழகம் அடைந்துள்ள அபிவிருத்திகளையும், கல்வி வளர்ச்சியையும் பாராட்டினார். இங்கு பஞ்சாபிகள் பாடசாலைகளை நடாத்துவதுபோல தமிழர்களும் பம்பாயில் கல்விக் கூடங்களை நடாத்துகிறார்கள். இதனால் நம்மிடம் சகோதரத்துவம் ஒருமைப்பாடு ஏற்படுகிறது என்றார்.

நாளைவரை ஜனாதிபதி ஜெயில்சிங் தமிழ் நாட்டில் தங்கியிருப்பார்.

### பிறருக்கு...

...7-ஆம் பக்கத் தொடர்

வில் உதவினர். இன்னும் நல்லூர் திருவாட்டி டி. கனகலிங்கம் குடும்பத்தாரும் நாற்றுமேடை தயாரித்து உபகரிப்பவர் அண்மையில் லட்சக்கணக்கான நெல்லிக் கன்றுகள் நாற்றுமேடையில் உண்டாக உதவியவர் வைத்தியர், மருந்துக்கடைக்காரர் அவர்கள். இங்ஙனமாக நாம் உங்களை இரப்பவை பொன்னும் பொருளும் அல்ல உங்கள் தேவை கண்டு எஞ்சிய தாவர விதைகள், தடிகள், நாற்றுகள்.

நன்றி:
மில்க்வைற் செய்தி

### திருமலையில்....

... 1ஆம் பக்கத் தொடர்

சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இரவு எட்டு மணி போல வந்த இனந்தெரியாத நபர்கள் இவரை அழைத்துத் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி ஜானகி அம்மாள் கனகசபை

நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய புகையிரத மா அதிபர் மார்க்கண்டு கனகசபை அவர்களின் மனைவி ஜானகி அம்மாள் கொழும்பில் காலமானார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக, அவரது மகனின் இல்லமாகிய தெஹிவளையிலுள்ள இல. 5 எபனேசர் இடத்திலிருந்து 28-7-85 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

76 A கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி குணேஷ் பரராஜசிங்கம்


நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

## அனுராதபுரத்தில் பாதிப்புற்ற ஆசிரியர் அனைவருக்கும் விசேஷ லீவு வழங்க வேண்டும்

அனுராதபுரத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிலைமை சீரடைந்து பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை விசேஷ லீவு வழங்கப்பட வேண்டும் என பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மலாயன் சங்க கட்டடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாதிப்புக்குள்ளான ஆசிரியர்களுக்கு ஆனி, ஆடி மாத சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பது எனவும், இந்த ஆசிரியர்களினால் கையொப்பம் இடப்பட்ட மகஜர் ஒன்றை கல்விச் சேவை அமைச்சுக்கு அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மகஜரில் கையொப்பம் இடுவதற்கு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை இம்மாதம் 30ஆம் திகதி காலை ஸ்ரான்லி வீதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இவ்விடயங்களை கவனிப்பதற்கு ஐவர் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது

நயினாதீவில்

### மீண்டும் பஸ் சேவை

(மண்கும்பான்)

நயினாதீவில் சேவையாற்றி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை ஆயுதப் படையினர் தங்களின் தேவைக்கென எடுத்து பல மாதங்களாக பாவித்து வந்தனர். தற்பொழுது பொது மக்களின் பாவிப்புக்கென திருப்பி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரிடம் ஒப்படைத்ததையடுத்து இந்த பஸ்சேவை பொது மக்களின் பாவிப்புக்கென சேவையாற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### மதியுதீன் தலைமை....

-1ம் பக்கத் தொடர்

லை முஸ்லிம் கவுன்சில் சர்வகட்சி மாநாட்டில் கிழக்குக்கும், வடக்குக்கும் தனித்தனியான மாகாண சபைகளையே கேட்டதாகத் தெரிவித்த டாக்டர் பதியுதீன் மஹ்மூத், இதனையே தமிழ்நாட்டில் சந்திக்கவுள்ள தலைவர்களிடமும் வலியுறுத்திப் பேசவதாகச் சொன்னார்.

ஆனாலும், அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள், அவர்களின் அபிலாஷைகளை மிகக் கவனமாகச் செவிமடுக்க தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இம் முஸ்லிம் குழுவினர் தமிழக அமைச்சர்களையும் சந்திக்க விரும்புவதால், அதற்கான ஏற்பாடுகளை கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் திருடிக்ஸிற் மேற்கொண்டுவருவதாகவும் தெரியவந்துள்ளது.

### தவில்கலைஞர்....

-1ம் பக்கத் தொடர்

மட்டுவில் வேம்படி அம்பலத்துறை வயலூர் முருகன் ஆலயத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆலயத் திருவிழாவுக்கு இரு கோஷ்டி மேளங்கள் விசேடமாக வந்தன. அந்த இரு கோஷ்டிகளின் தவில் வித்துவான்களுக்கிடையில் ஏற்கனவே பகைமை இருந்து வந்ததாம். விசேட கோஷ்டிகள் இரண்டும் வீதியில் நின்ற போது தவில் வித்துவான்களுக்கிடையில் வாய்ப்பேச்சு முற்றி கைகளால் பரிமாறும் நிலை ஏற்பட்டது. அடியார்கள் தலையிட்டு மோதலை விலக்கி வைத்தனர்.

### முல்கிரிகல....

-1ம் பக்கத் தொடர்

தல் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். போட்டியிட விரும்பும் அபேட்சகர்கள் அன்றைய தினம் ஹம்பாந்தோட்டை கச்சேரியில் தமது கட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

### ஜூலை கொலைகளை....

-1ம் பக்கத் தொடர்

ஏறத்தாழ பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆண், பெண், இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியர், கலந்து கொண்ட இவ் ஊர்வலத்தில், "அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்; தமிழீழம் அமைப்போம்; ஆயுதம் ஏந்துவோம்" போன்ற சுலோக அட்டைகள் காணப்பட்டன.

ஊர்வலத்தின் முன்னால் பூட்டான் மாநாட்டையும், பேச்சுவார்த்தைகளையும் கண்டிக்கும் தெருக் கூத்து நாடகம் நடைபெற்றுச் சென்றது.

மாலை ஆறரை மணியளவில் பல்கலைக்கழகத்தை ஊர்வலம் வந்தடைந்த பின்னர் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

83 ஜூலை படுகொலைகளைக் கண்டித்துப் பலரும் கவிதைகளை வாசித்தனர், தெருக் கூத்து நாடகமும் மேடையேற்றப்பட்டது.

ஊர்வலத்தின் கடைசியில் பெரும் தொகையான வாகனங்கள் பங்குபற்றின. வழி நெடுகிலும் லட்சக் கணக்கான மக்கள் ஊர்வலத்தைப் பார்த்து, தங்கள் ஆதரவை வழங்கினர்.

### ஜனாதிபதியை ..

-1ம் பக்கத் தொடர்

பற்றியும் சரியான விபரங்களைப் பெறுவதற்காகவே தாம் ஜனாதிபதியைச் சந்தித்ததாக டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

### இராணுவ வீரரை....

-1ம் பக்கத் தொடர்

மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்தவரென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட இந்தக் குடும்பத்தில் கடத்தப்பட்டவர் மட்டுமே வேலை செய்பவர் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### அடுத்தடுத்து 3வது கொள்ளை

யாழ். நாவலர் வீதியிலுள்ள நீர்வள ஆராய்ச்சி சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் கொள்ளை நடைபெற்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இது மூன்றாவது தடவையாக நடைபெற்ற கொள்ளையாகும்.

### மின் தாக்கி மரணம்

(தெல்லிப்பளை)

சட்ட விரோத மின்சாரப் பாவனையால் ஏழாலையில் ஒருவர் மரணமானார், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தால் எஸ். சிவசுப்பிரமணியம் என்பவரே மரணமானவராவார்.

### முன்னாள் யாழ்...

-1ம் பக்கத் தொடர்

வீடு எரிக்கப்பட்டபோது அவரது வாகனமும் எரிந்ததையடுத்து இந்த ஜீப்வண்டி அவருக்கு வழங்கப்பட்டது. யோகேஸ்வரனும் மனைவியும் தற்போது தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர்.

### மூன்று இளைஞன்....

...1ம் பக்கத் தொடர்

மரக்குற்றிகள், டயர்கள் ஆகியவைகளைக் கொண்டு வந்து, வீதியால் சென்ற வாகனங்களிலிருந்து பெற்றோல், டீசலையும் பெற்ற ஊர் மக்கள் சடலங்களை ஒன்றுக் கிடத்தி தீமூட்டி எரித்தனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் பலர் சேமக்காலைக்கு வந்து வீடியோ மூலம் சடலங்களைப் படம் எடுத்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

### இன்ரசிற்றி....

-1ம் பக்கத் தொடர்

ரும்படி புகையிரதப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி இன்று காலை கொழும்பில் இருந்து புறப்படும் இன்ரசிற்றி பகல் 11-55க்கு யாழ்ப்பாணம் வந்து, பின்னர் பிற்பகல் 2 35க்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்படும்.

திங்கட்கிழமை முதல் முன்னர் போல இன்ரசிற்றி ரயில் சேவையில் ஈடுபடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28-07-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336

# விடியலைத் தேடும் வெண்புறா

**செம்பியன் செல்வன்**

★

★

"தம்பி!... ராத்திரிப் பெய்த மழைக்கு... ஒரே ஒழுக்கு... அறையெல்லாம் வெள்ளம்.... ஐயாட்ட எவ்வளவோ நாள் கேட்டும் ஐயா ஒண்டையும் கவனிக்கேல்ல... அதுதான் ராத்திரி விழுந்த ஓலையெடுத்து கூரைக்குச் சொருகியிருக்கிறன்... ராத்திரி வீட்டில பிள்ளை குட்டியள் கண்மூட முடியவில்லை... எல்லாரும் குளிருக்க நடுங்கிக் கொண்டு நிண்டதுதான் மிச்சம்... தம்பி ஓலை எடுத்ததுக்குக் கோபிக்கக் கூடாது..."

— அவன் பதறிக் கொண்டு எழுந்தான். இந்தச் சாட்டில் வீட்டினுள்ளே எட்டிப் பார்த்தான். பண்டம் பாத்திரங்கள் எல்லாம் அலங்கோலமாக... பிடவை... துணிமணிகள் கொடியின் மூலைக்கு ஒதுக்கப்பட்டு... பெட்டி படுக்கைகள் ஒன்றின் மேல் ஒன்று ஏறி... நிலம் புளித்த சேறுக மெல்லிய மணம்... ஈரக் கருமை கொண்ட சுவர்...

அவன் அப்பாவை ஏதும் கோபிப்பானோ என்ற அச்சத்தில் அடுப்படியிலிருந்து எட்டிப்பார்க்கும் ரதி... பாக்கியம்... சின்னஞ்சிறுசுகள்...

இது இவர்கள் வாழ்க்கையின் இன்னொரு பக்கமா? நரகமாகவும் சில பொழுதுகள் இவர்களுக்கு விடிவதுண்டா?

இந்தக் குளிர் இரவில்... பகலில்... ரதியும் சேர்ந்து துன்பப்பட்டாளா?... என்னைப் பற்றி என்ன நினைப்பாள்...!

அவனுக்குச் சிலையுரிந்த வெட்கமாயிருந்தது.

முற்றுகையால் நகரைப் பஞ்சம் பீடித்தபோது பாண் மாத்திரமே உணவாகியிருந்தது. அதுவும் ரேஷன்முறையில் விநியோகிக்கப்பட்டது. தொழிலாளர், தொழில்நுட்பவியலாளர், பொறியியலாளர், போன்றோர்க்கு, நாளுக்கு 250 கிராமும் ஏனையோருக்கு 125 கிராமும் வழங்கப்பட்டன. இப்படிக் கொடுக்கப்பட்ட ஒரு துண்டை அங்கே காட்சிச்சாலையின் கண்ணாடிப் பெட்டியில் பார்த்தோம். இன்னும், அப்போதைய வாழ்வின் நிஷ்டூரத்தையும் அதைத் தாக்குப் பிடித்த தீரத்தையும் காட்டுகின்ற பல்வேறு பொருட்கள், துப்பாக்கிகள், தொப்பிகள், கடிதங்கள்... இடையில் ஒரு வயலினும்...

சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் லெனின்கிராத் வாசிகள் உருக்கை வார்த்தார்கள், ஆயுதம் வடித்தார்கள், உணவுற்பத்தி செய்தார்கள் அதோடு கவிதை எழுதினார்கள் இசை அமைத்தார்கள், அரங்கேற்றவும் செய்தார்கள். மிகப்பெரிய நூலகமான சல்திகோவ் ஷ்செட்றின் நூலகம் திறந்திருந்தது. நாடகங்கள் அரங்கேறின. இசை நிகழ்ச்சிகள் நடந்தன. ஷஸ்தகோவிச்சின் "ஏழாவது ஸிம்பனி" அரங்கேறியதும் அப்போதுதான். லெனின் கிராத் இசைக்குழுவின் கலைஞர்கள் பட்டினியால் மறைந்து கொண்டிருந்தார்கள். படையினரின் இசைக்குழுக்களிலிருந்தோர் பங்குடன் "ஏழாவது ஸிம்பனி" மேடையேற்றப்பட்டது.

பாழுங்கற்களிடை பூத்தமலரென வாழ்வை அப்போது விகசிக்கச் செய்த வீரத்தின் சின்னங்களாய்த்தான் அந்த வயலினும் இந்த 'ஏழாவது ஸிம்பனி' நிகழ்ச்சி நிரலும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

லெனின் கிராத்தில் போர் விளைத்த அழிவின் அடையாளங்கள் இப்போது எங்குமே தெரியவில்லை.

சுற்றுவட்டாரத்திலுள்ள கட்டடங்களிடையில் கம்பீரமாகத் தலை தூக்கி நிற்கிறது, 'இஸாக்கியெவ்ஸ்கிய் ஸபோர்' என்கிற சாந்த ஐஸாக் தேவாலயம். இப்போது கலைக்காட்சிச் சாலையாக இருக்கிற இந்தக் கருஞ்சாம்பல் நிறக் கட்டடத்திற்கு, யுத்த காலத்தில் கருநிறம் பூசி ஜெர்மானிய விமானத் தாக்குதலிலிருந்து காப்பாற்றியுள்ளார்கள்.

இந்தப் பிரமாண்டமான கட்டடத்தைக் கட்டுவதற்கு 40 ஆண்டுகளாயினவாம். சாரமரங்கள் எவ்வாறு பொருத்தப்பட்டன என்பதைக் காட்டுவதற்கே மாதிரி ஒன்று உள்ளே உள்ளது. சமய சம்பந்தமான ஓவியங்கள் விதானங்களையும் சுவர்களையும் அலங்கரிக்கின்றன. உலகம் உருள்கிறது என்பதை விளக்கும் ஊசல் ஒன்று, ஆலயக் கோபுரக் கோளத்தின் கீழ்ப் புறத்திலிருந்து தொங்கி ஆடிக்கொண்டுள்ளது.

தேவாலயத்திற்கு முன்னே உள்ள சதுக்கத்திற்கு 'டிசம்பரிஸ்டுகள் சதுக்கம்' என்று பெயர். செல்வமும் புகழும் மிக்கிருந்தும் நாட்டிற்காக— ஜாருக்கெதிராக— 1825 ல் கிளர்ந்த வீரர்கள் நினைவாக இடப்பட்ட பெயர். மத்தியில் பியோத்தர் சக்கரவர்த்தியின் நினைவுச்சிலை. யுத்தகாலத்தில் இச்சதுக்கத்தில் மக்கள் கோவா பயிரிட்டார்களாம்.

இஸாக்கிய வெஸ்கிய்ஸபோரைப்போல இன்னுமொரு பிரம்மாண்டமான தேவாலயம் இருக்கிறது— கஸான்ஸ்கிய் ஸபோர். முன்புறம் உள்வளைந்த அரைவட்ட வடிவில் முற்றம். நடுவில் நீரூற்றைச் சூழப் பூங்கா மாதிரி இருக்கிறது. அங்கிருந்த வாங்குகளில் உட்கார்ந்திருந்தோம். நல்ல வெய்யில். மழை ஐந்து நிமிஷத்திற்கு முந்தித்தான் ஓய்ந்திருந்தது. இனியும் எப்போதென்றாலும் வரலாம். எந்த நிமிஷத்திலும் வரும் ஓ— ஓடப் பெய்யும். ஒதுங்குவதற்குள் ஓய்ந்தும் விடும். இதுதான் லெனின்கிராத் காலநிலை. பெண்களைப் போல என்று யாரோ சொன்னார்கள்.

கட்டடத்தின் முன் பகுதியில் பிரமாண்டமான தூண்கள் நெருங்கியுள்ளன. கம்பீரமான கட்டடம். இதை நிர்மாணித்தவர் வெரொனிஹின் என்கிற கலைஞர். நெப்போலியனைத் தோற்கடித்த ருஷ்ய தளபதி குத்தூஸவ் இங்கேதான் அடக்கம் செய்யப்பட்டாராம்.

''அரே பாபா, எவ்வளவு பெரிய தூண்கள்...'' என்றார் நாராயண்.

''எத்தனை தூண்கள் பாருங்கள்...'' என்றேன்.

''இவற்றைப் பார்க்கும்போது ருஷ்யாவில் புரட்சி வந்ததைப் புரிந்து கொள்ள முடிகிறது...''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''இவ்வளவையும் கட்டி முடிக்க அந்தக் காலத்தில் எத்தனை பேர் கஷ்டப்படுத்தப்பட்டிருப்பார்கள்?''

எனக்கு நண்பர் விதானயின் நினைவு வந்தது. அவரது தாஜ்மஹல் பற்றிய கவிதை. கவிதை நினைவில்லை, கருத்து மட்டும் நினைவிருந்தது. சொன்னேன்:

''ஷாஜஹான் மன்னனே, உமது கனவு மாளிகையை நிர்மாணித்த உழைப்பாளிகளைப் பாட என்னை அநுமதியும்..

''அச்சா, அச்சா, அருமையான கவிதை...'' என்றார் நாராயண்.

''இந்த வெரொனிஹின் கூட ஒரு காலத்தில் அடிமையாயிருந்தவர்தான்.....'' என்றார் செர்கே.

'நான் பேந்து சாப்பிடுறேன்... முதலில் நீங்களும் தம்பியும்...?'

அவர் வெடிச் சிரிப்புச் சிரித்தார்; 'ஓ! நீ மனுஷியோட சாப்பிட நிக்கிறு— உன்னை ஏன் குழப்புவான்...'

மாரிமுத்து பிள்ளைகளுக்கு முன்னால் அசடு வழிய குழந்தைகள் அப்பா படுகிற பாட்டை ரசிக்க, 'உந்தமனுஷனுக்கு இந்த வயதிலும்...' – என்று பாக்கியம் கொடுப்பிற்குள் ரதிக்குத் தெரியாமல் சிரித்தாள்.

மாரிமுத்து ஆர் வளவுக்க... இளம் பொடியன் ஒண்டு நிக்கிறது?'

''அவர்தான் வளவுகாரரின்ர மகன்... தேங்காய் பிடுங்க வந்தவர்...

''அப்ப— தம்பியையும் சாப்பிடக் கூப்பிடன்...''

–அதுவரை அவரின் பேச்சால் தங்கள் வளவை விட்டு மாரிமுத்தையும் குடும்பத்தையும் கிளப்பப் பார்க்கிறாரேயெண்டு எரிச்சல் பட்டுக் கொண்டிருந்த ரமேஷுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

'அப்ப தம்பி... நீங்களும் கொஞ்சம் சாப்பிட்டாலென்ன?'

'சாப்பிடக் கூப்பிட்டதுக்கு நன்றி; வீட்டில சொல்லி விட்டு வரேல்ல... உங்களுக்கும் நடடரெண்டு... இன்னொரு முறை பாப்பம்...? –அவன் கூச்சத்துடன் கூறினான். சிவலிங்கம் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்;

'அப்பா... அவையெல்லாம் எங்கட வீட்டில சாப்பிடுவினமே? அவையின்ர கௌரவம் என்னவாகும்...' -என்ற ரதியின் குரல் கேட்டது; ரதி நாக்கைக் கடித்துக் கொண்டாள். இது கல்லூரிப் பழக்கம். தாம் கொடுப்பதை யாரும் வாங்காவிட்டால் பேசுகின்ற நிட்டூர வார்த்தைகள். பழக்க தோஷம் வாயில் வந்து விட்டது.

ரமேஷுக்கு நெஞ்சத்தில் பூவிரிந்து தேன் பிலிற்றியது.

'ஓம்... தம்பி... பின்னையும் 'விரும்புது கொஞ்சமாச் சாப்பிட்டா என்ன...?'

'அப்படியொண்டுமில்லை. நீங்கள் வித்தியாசமாக நினைக்கப்படாது. நீங்கள் வந்த விருந்தைக் கவனியுங்க... நான் என்ன ஊரோடு இருக்கிறவன்தானே ஆறுதலாப் பாப்பம்... — கூறிவிட்டு குட்டியனிடம் போனான். விருந்து தொடர்ந்தது;

இராசன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.


'உங்கட வாகனம் ரெடியா நிக்குது...!' —என்று கூறியபடி உள்ளே போனான். அண்ணனைக் கண்டதும் ரதி இறக்கம் தளர்ந்தவளாய் 'அண்ணா!'—என்று அவன் கைகளைப் பற்றினாள்; அவன் அன்போடு பார்த்தான்.




திரும்பும்போதுதான் கவனித்தேன் – இடுகாட்டின் நுழைவாசலருகில் ஒரு சிறுதடாகம். தெளிந்த நீரினடியில் சூரிய ஒளியில் நாணயங்கள் மின்னிக்கொண்டிருந்தன. திரும்பும்போது சில பேர் வீசிவிட்டுச் செல்கிறார்கள். மீண்டும் இங்கே வருவோம் என்ற நம்பிக்கை, வரவேண்டும் என்ற விருப்பின் அடையாளம்.

பிஸ்கரேவ்ஸ்கியே ஞாபகார்த்த இடுகாட்டிலிருந்து 'வீரர்கள் நினைவாலய'த்தை பார்வையிடப் போனோம்.

'வீரர்கள் நினைவாலயம்' புல்கோவ்ஸ்கயா ஹோட்டல் எதிரிலுள்ள வெற்றிச் சதுக்கத்தில் அமைந்திருக்கிறது. 30வது வெற்றி விழாவின் போது நிறுவப்பட்டதாம். அதுவே ஒரு கட்டட சிற்பக் கலை உச்சம். அதைவிட உள்ளிருந்த ஆத்மா வேறு. சதுக்கத்தின் இருபுறத்து எல்லைப் பீடங்களிலும் வீரமிகு மாந்தரின் உருவங்கள், சற்றுத் தள்ளி அணையாத்தீபமும் அதனெதிரில் காட்சிச்சாலையும்.



வீரர்கள் நினைவாலயம்

'அப்பாட்ட சொல்லிறன்... உங்களுக்கு மேய்ஞ்ச தரச் சொல்லி...'

குட்டியனையும் அழைத்துக் கொண்டு மரங்களைப் பார்க்கப்போனான்.

'பிள்ளை பராக்குப் பார்த்துக் கொண்டு நிண்டா எப்பிடி? அவையளையும் சாப்பிடக் கூப்பிட்டிட்டு... அதுகள் எவ்வளவு உதவியானதுகள்?... வித்தியாசம் பாராட்டாமப் பழகுதுகள்... அதுகள் அண்டைக்கு காசாப் பணமாக் கொடுத்துதவியிராட்டி உன்ர சடங்கு அப்படி ஒப்பேறியிருக்குமே?...' – பாக்கியம் கூறுவது கேட்டது.

மாரிமுத்துவின் கையில் சிக்கிய சேவல் படபடத்தது.

எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு பறவை கூவியது. தென்னோலைகள் தென்றலில் ஆடி நீர் சிதறியது. காலடியில் ஈரமண் குளிர்மை யூட்டியது. மண் வெயிலில் சிரித்தது.

குட்டியன் ஒலை தேங்காய் நெற்றுக்களை வெட்டி விழுத்தினான். இவன் காய் உள்ள மரங்களைக் காட்டிக் கொண்டு வந்தான். கண்கள் திருட்டுத் தனமாக வீட்டுப் பக்கம் அடிக்கடி வெட்டிற்று. ஏமாற்றம் தான்.

தன் முதன்மைத்தனமற்ற... கவனிப்பற்ற அநாதைநிலை ஏமாற்றத்தையும் அகம்பாவத்தையும் ஏற்படுத்தியது.

நண்பகலாயிற்று. குட்டியன் மரமேறிக் களைத்த, வியர்வை உடலைக் கத்தியால் வழித்து விட்டான். இந்த குளிரில் இவ்வளவு வியர்வையா? உழைப்பா? தன்னை ஒருகணம் நினைத்துக் கொண்டான். வெட்கமாயிருந்தது.

'குட்டியன் ஒரு இளநி வெட்டிக்குடி...'

'ஐயா, எண்டா ஒரு குரும்பை எடுக்க விடமாட்டார்' — குட்டியன் கத்தியால் கொத்தி இளநீரை எடுத்தான்.

'தம்பி உங்களுக்கு?...' — அவன் சுற்று முற்றும் பார்த்தான். தூரத்தில் நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்த ரதியின் தங்கைகள் பூமணியும் தேவியும் கண்ணில் பட்டார்கள். அவன் கையசைத்து கூப்பிட்டான். அவர்கள் வெட்கத்தால் உள்ளே ஓடிமறைந்தார்கள்.

அவன் ஒரு இளநியைக் கையில் எடுத்துக் கொண்டான். குட்டியன் ஒரு இளநிக்குலையை தூக்கிக் கொண்டு மாரிமுத்து வீட்டை நோக்கி நடந்தான்.

வாசலில் சப்தம் கேட்டது. யாரோ வரும் காலடிகள் மாரிமுத்து... விளைவிலிங்கம்... வல்லிபுரத்தார்; அவர் முழுக்கலேயில் இருந்தாலும் நிதானத்துடன் வந்து கொண்டிருந்தார்.

'மாரிமுத்து— நீ கூப்பிட்டிட்டாய் எண்டுதான் வந்தனான்... ஏன் தெரியுமே?... நீ ஒரு ஒப்பற்ற தொழிலாளி... உன்ர வீட்ட சாப்பிடக் கொடுத்து வைச்சிருக்க வேணும்... அதோட உன்ர வீட்டுச் சமையல்... சும்மா சொல்லப்படாது... நீ கொடுத்து வைச்சனீ?...'

'என்னையா... நீங்கள்...? '— மாரிமுத்து நெளிந்தான். அடுப்படியிலிருந்து குழம்பு மணம் காற்றில் மிதந்து வந்தது.

'ம் ஆ...'—வல்லிபுரத்தார் வாசனையை இழுத்துவிட்டார். மாரிமுத்து நான் சொல்லச் சொல்ல நீ கேக்க மாட்டாய் எண்கிறு! .. அங்க வந்திடெண்டா... அங்க உனக்கிருக்க வீட்டுவசதியெல்லாமிருக்கு... என்ர வேலையளுக்கும் துணையாயிருக்கும்... உனக்கும் கைநிறைய சம்பளம் தருவன்... ரெண்டு மூண்டு வருடத்தில நீயும் காணி எடுத்துப்போடுவாய்... குழந்தை குட்டியளுக்கும் பின்னடிக்கு குந்தி எழும்ப நிலம் வேண்டாமே!

வீட்டின் பத்திரமாக கிடந்த மரக்கட்டில் ஈரம் துடைத்து, வெயில் காய்ந்து காத்திருந்தது.

முதலில இருக்க ஐயா... சாப்பாடெல்லாம் சமைச்சாச்சோ எண்டு பாப்பம்...!'—என்று மாரிமுத்து கதைமாற்றினான்.

'மாரிமுத்து... உதுதான் எனக்குப் புடிக்காது... கொஞ்சம் போட்டிருக்கிறன். எண்டோட்டை நீ புலுடா விடப்பாக்கிறாய்? மாரி கால மப்பிலும் மற்றி மதியிழக்கப் பாயாது... கண்டியோ— நீ என்ன சொல்லுறா... என்னோட வரப்போறியோ இல்லையோ...'?

'எல்லாம் பேசிப்பம்... இப்ப முதலில சாப்பிடுவம் ஐயா... என்ன பாக்கியம் எல்லாம் சரியா? ... '

'ஓம்!... உங்களுக்காகத்தான் காத்திருக்கிறம்... நீங்கள் சரியெண்டாச் சரி... ஆனா இங்க ஒரே ஈரம்... அந்தக் கட்டிலில இருந்து தான் சாப்பிடவேணும்... '—என்று பாக்கியம் குரல்கொடுத்தாள்.

கட்டிலைச் சுற்றி நாற்காலியைப் போட்டனர் எல்லாக் கறிவகைகளும் கட்டிலுக்கு வந்தன. பந்தி ஆரம்பமாகியது.

'மாரிமுத்து நீயும் குந்து! '

# 14

லெனின்கிராதிலிருந்து 34 கி. மீ. தொலைவிலுள்ள 'பெத்ரோத்வரெத்ஸ்' பெயரறியா எத்தனையோ திறமை வாய்ந்த கட்டடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், சிற்பிகள் மற்றும் ஆயிரக்கணக்கான கைவினையாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட அழகாபுரி. இதன் வனப்பும் வடிவும் இன்றும் மக்களைக் கவர்ந்திழுக்கின்றன. உலகின் பல வேறு இடங்களுடன் ஒப்பிட்டாலும் கூட பெத்ரோத்வரெத்ஸ் ஒரு படி மேலேநிற்கும் என்றே கூறப்படுகிறது.

இங்கே பியோத்தர் பியர்வியினதும், அவன் சந்ததியினரதும் ஆடம்பர புறநகர் வசிப்பிடமாய் முன்னர் விளங்கிய மாளிகையை ரஸ்த்ரெல்லி என்ற கலைஞன் படைத்தான். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மானியர்கள் இம்மாளிகையைத் தகர்த்தார்கள், தீயிட்டார்கள், கொள்ளையடித்தார்கள். பெத்ரோத்வரெத்ஸ் மீட்கப்பட்டபோது கற்குவியல்களையும், கருகிய கட்டடங்களையுமே காணமுடிந்தது. வெளிநாட்டிலிருந்து அழைக்கப்பட்ட நிபுணர்கள், பழைய நிலைக்கு இக்கலாசாலைத் தைக் கொண்டுவர முடியாது என்று கைவிரித்தார்கள்.

ஆனால், சோவியத் நிபுணர்களும், லெனின்கிராத் மக்களும் அதை ஏற்கவில்லை. வெற்றித்திருநாளுக்கடுத்த நாளே புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. நிர்மாணத்திற்கே தேவைப்பட்டிருக்க முடியாத அளவுக்கு, திறமையையும் முயற்சியையும் புனர்நிர்மாணம் வேண்டி நிற்கிறது. பெத்ரோத்வரெத்ஸ் இன்னும் பழைய முழுமை பெறவில்லை. இப்போது புனரமைப்பில் 90 வீதம் வேலைகள்தாம் முடிவடைந்துள்ளனவாம் என்றாலும் எவ்வளவு அழகு.

ஒவ்வொரு கோடை ஸீஸனிலும் புதிதாகத் திருத்தப்பட்ட ஒவ்வொரு பகுதியைக் காட்சிக்குத் தயாராக்குவதை புனரமைப்புக் குழுக்கள் தம் வருஷாந்த வழக்கமாகக் கொண்டுள்ளன. திறமையும் கடும் உழைப்பும் இம்மாளிகைக்கும் தோட்டத்திற்கும் மறுபிறவி கொடுத்துள்ளன.

அப்பிளும் ஓக்கும் அடர்ந்த காவிடை செல்லும் பாதைகள். அடர்ந்த புற்றரை கண்பட்ட இடமெல்லாம் நீரூற்றுக்கள். பெத்ரோத்வரெத்ஸ். நீரூற்றுக்களின் நகரம் என்றே பெயர் கொண்டுள்ளது. அதைப்பற்றிய அத்தனை வர்ணனைகளும் உண்மையென்றே பட்டன. சிற்பங்கள் அணிவகுத்த படி வழி இறங்கி, எதிரே உள்ள நீண்டபாதைகளில் நடக்கும்போது முன்னால் ஃபின்லாந்து வளைகுடாக் கடல் பரந்து கிடக்கிறது. இந்தத்துறையிலிருந்து, நகருக்குப் படகுச் சேவை நடத்துகிறார்கள். ஒருமணிநேரப் பயணமாம். மாலை ஏழரை மணியின் மஞ்சள் வெய்யிலில் அந்தப் படகுப் பயணம் வாய்க்கவில்லை— பிந்திவிட்டோம்.